

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053  கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 12ம் நாள் நிறைமதி (29-09-2023 வெள்ளிக்கிழமை) வெளியீடு +94 21 221 2739

## அகவை நன்னாள் சிவ வாழ்த்துகள்



இந்த ஆண்டு புரட்டாசி 5ம் நாளில் பவளவிழாக் காணும் அருட்குருநாதர் சத்தியவேல் முருகனார் ஐயாவிற்கு இனிய அகவை வாழ்த்துகள். (4ம் பக்கம் பார்க்க)

# நீத்தார் கடன் செய்ய சிறந்த திதி நாள் பேரொடுக்க மறைமதி (மாலயம்)

# இம்முறை புரட்டாசி 27 (ஒக் 14, 2023) சனிக்கிழமை அன்று நோற்கப்படும்



மாலய மறைமதி எனபது பிதிர்களுக்குரிய சிறப்பு நாளாகும். இந்நாளில் அடியவர்கள் விரதமிருந்து சிவனை வழிபட்டு, மறைந்த உங்கள் பெற்றோர்கள், அவர்கள் வழிவந்தவர்கள் மற்றும் உங்கள் முன்னோர்களையும் வணங்கி, அவர்களுக்கு படையலிட்டு அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் துணை நிற்கட்டும். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர் குறைகளில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

### மானிடப்பிறப்பின் சிறப்பு

**உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்**
**நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்**
**வரைசேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட**
**விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு மிழலையாமே**

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி , எண்பத்து நான்கு நூறாயிரத்தில் ஒன்று (1/8,400,000) நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப்பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் கூடிய அருமையான இறைவனின் படைப்பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்) , நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப்பெருவாழ்வினை அடையும் வழியினை கடைபிடித்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

**இதனையே வள்ளுவரும்**
**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

ஒருவர் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவரால் தெய்வீக நிலையை அடைய முடியுமா என்ற கேள்விக்கு வள்ளுவர் அழகாகப் பதிலளித்துள்ளார் இந்தக்குறளில். ஒருவர் இல்லற வாழ்க்கையில் வாழ்வதற்கான அடிப்படை நெறிகளை கடைப்பற்றி நெறி தவறாது வாழ்ந்தால் , அதாவது தமிழ் வேதங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில்

(07ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் தலைநகரில் ஆனந்தநடனமாடும் 27 அடி உயரமான ஆடல்வல்லான் சிலை



இந்தியாவின் தலைநகரான, புதுடெல்லியில் இந்தியா தலைமையிலான ஜி20 மாநாடு இந்த மாதம் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. இம்மாநாட்டில் இந்தியாவின் பண்பாட்டு ஆழத்தினை பறைசாற்றும் வகையில், எண் வகை உலோகங்களாலான 27 அடி ஆடல்வல்லான் சிலையானது ஜி20 மாநாடு நடைபெற்ற பாரத் மண்டப முன்றலில் கம்பீரமாக நிறுவப்பட்டுள்ளது. ஐந்தொழிலின் தத்துவத்தினை உலகத்தலைவர்கள் காணும் வகையில் பாரதப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் இதனை ஏற்படுத்தியுள்ளார்.

இச்சிலையானது தஞ்சாவூர் மாவட்டம் சுவாமி மலையை சேர்ந்த 61 வயதுடைய ஸ்ரீகந்த சிற்பி மற்றும் அவரது சகோதரர்களான இராதாகிருஷ்ண சிற்பி, சுவாமிநாத சிற்பி ஆகியோரால் செதுக்கப்பெற்றதாகும்.

சுவாமிமலையை சேர்ந்த ஸ்ரீ கந்த சிற்பியானவர் சோழர் காலத்தில் தஞ்சாவூர் பெரிய கோயில் நடராசர் சிலை வடித்த குடும்பத்தை சேர்ந்தவர். இந்தக் குடும்பத்தின் முன்னோர்கள் தஞ்சை பெரிய கோயிலை கட்டுவதில் பங்காற்றியுள்ளனர். அதன் பிறகு, 16ஆம் நூற்றாண்டில் தாராசுரம் மற்றும் சுவாமி மலையில் உள்ள கோயில் சிலைகளின்

(07ஆம் பக்கம் பார்க்க)

# பொன்னம்பலத்தில் இருந்த திருமுறைகளை மின்னம்பலத்திற்கு ஏற்றத் துணைநின்ற சச்சிதானந்தன் ஐயா உள்ளிட்ட 42 பேருக்கு ஆளுநர் பாராட்டு

பொன்னம்பலத்தில் இருந்த திருமுறையை, மின்பலத்திற்கு ஏற்ற துணைநின்ற இலங்கை மறவன்புலவு க சச்சிதானந்தன் ஐயா உள்ளிட்ட 42 பங்களிப்பாளர்களை தமிழக ஆளுநர் ஐயா ரவி அவர்கள் புரட்டாசித் திங்கள் 6ம் நாள் சனிக்கிழமை (23-9-2023) பாராட்டினார்.

ஐயாவின் பன்முக சேவைத்தளத்தில், திருமுறைகளுக்கான வரிசையில், தர்மபுரம் ஆதீனம் 26வது குருமகாசன்னிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம், திருமுறைகள் தொகுக்கப்பட்டு, 10 ஆண்டுகள் கடுமையாக உழைத்து, அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட தருமபுர ஆதீன பன்னிரு திருமுறைத் தொகுப்புகள் என்ற 16 தொகுதி புத்தகங்களின் ஆணிவேர் மறுவன்புலவு சிவ சச்சிதானந்தம் ஐயா ஆவார். எப்படி இராச இராச சோழன் திருமுறைகளை மீட்டு அவற்றை நம்பியாண்டார் தொகுத்தாரோ,

(07ஆம் பக்கம் பார்க்க)



# கிளிநொச்சியில் தெய்வப்புலமை திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலை கட்டம் திறப்பு விழா



போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பிள்ளைகள் பயன்பெறும் வண்ணம் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட கம்பன் கலைக்கோயில் வளாகத்தின் ஒரு பிரிவாகிய **“தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலைக்”** கட்டடத்தினை இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் அறங்காவலர்சபை உறுப்பினரான. திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களின் நன்கொடையில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் கட்டியுள்ளனர்.

அந்தவகையில் இக்கட்டட திறப்பு விழாவானது, கடந்த ஆவனித் திங்கள் 30ம் நாள் (16-09-2023) சனிக்கிழமை அன்று கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சீர்வளர்சீர் சோமசுந்தர ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள் - நல்லை ஆதீனம், சீர்வளர்சீர் மீனாட்சிசுந்தரத் தம்பிரான் - திருக்கேதீச்சர தருமை ஆதீனக் கிளை, சீர்வளர்சீர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா ஆகியோர் கலந்து கொண்டு ஆசி வழங்கியிருந்தனர். மேலும் விருந்தினர்களாக சிவத்திரு. சீ.வி.கே.சிவஞானம் (வடமாகாணசபை முதல்வர்), சிவத்திரு. சிவஞானம் ஶ்ரீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்), சிவத்திரு. அ. வேழமாலிகிதன் (கிளிநொச்சி பிரதேச சபைத்தலைவர்) ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அடுத்த ஆண்டின் தைத் திங்களிலிருந்து, **“கவிச்சக்கரவர்த்தி கம்பர் முன்பள்ளி”** எனும் ஆங்கில பாடத் திட்டத்துடனான ஓர் முன்பள்ளியை இலவசமாக இதே கட்டடத்தில் நடாத்தத் திட்டமிட்டுள்ளமை சிறப்பம்சமாகும். எனவே இம் முன்பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் முன்னரே பதிவினை மேற்கொள்ளும்படியும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

# ஆன்மீகப் பிரசாரகர் பட்டயக் (டிப்ளோமா) கற்கைநெறி சான்றிதழ்கள் வழங்கல் நிகழ்வு





இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆன்மிகப் பிரசாரகர் பட்டயக் (டிப்ளோமா) கற்கை நெறி, ஆன்மிகப் பிரசாரகர் சான்றிதழ்க் கற்கை நெறி மற்றும் யோகாசனம் உயர் சான்றிதழ்க் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஆவணித் திங்கள் 27ம் நாள் (13-09-2023) புதன்கிழமை அன்று **நல்லை ஆதீனத்தில், தருமை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் மற்றும் நல்லை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் சோமசுந்தர ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள்** ஆகியோர் திருமுன்னிலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்திருந்தார். மேலும் பல விருத்தினர்களும் கலந்து சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் ஆன்மிகப் பிரசாரகர் பட்டயக் (டிப்ளோமா) கற்கை நெறியில் 13 பேரும், ஆன்மிகப் பிரசாரகர் சான்றிதழ்க் கற்கை நெறியில் 16 பேரும், யோகாசனம் உயர் சான்றிதழ்க் கற்கை நெறியில் 13 பேரும் என 42 பேர் சான்றிதழ்களை பெற்றிருந்தனர். நல்லை ஆதீனம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியன இணைந்து நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடாத்தி வருகின்ற **“தெய்வீக திருக்கூட்டத் தொடர்”** நிகழ்வின் 24ம் நாள் நிகழ்விலேயே இச்சான்றிதழ் வழங்கல் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# பண்டாரவளை நாயபெத்தை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் “ விநாயகர் சதுர்த்தி ”



பண்டாரவளை நாயபெத்தை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் கடந்த புரட்டாசித் திங்கள் 1ம் நாள் (18-09-2023) திங்கள்கிழமை அன்று, விநாயகப் பெருமானுக்குரிய சிறப்பு வழிபாடான **“விநாயகர் சதுர்த்தி”** வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் பெருமளவான அடியார் பெருமக்கள் கலந்து வழிபாடாற்றி சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வை பண்டாரவளை நாயபெத்தை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் அங்கத்தவர்களுடன், பண்டாரவளை நாயபெத்தை இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து நடத்தியிருந்தனர். குறிப்பிட்டளவு தமிழ் அடியார்கள் வாழும் பிரதேசத்தில் இவ்வாறு சைவத்தை பறைசாற்றும் நிகழ்வுகளை முன்னெடுக்கின்றமை போற்றுதலுக்குரியதாகும். இவ்வாறான சைவம் போற்றும் செயற்பாடுகள் எங்கும் பரவி அனைவரும் திருவருள் பெற்று உய்ய எல்லாம் வல்ல பரம்பொருள் அருள் புரிவாராக.

**திருச்சிற்றம்பலம்**

# திருவண்ணாமலை - அருணகிரிநாதர் திருக்கோயில் திருக்குடநீராட்டு

கடந்த 3 ஆண்டுகளாக நடந்தேறி வரும் அருணகிரிநாதர் திருக்கோயில் திருப்பணி, முதற் கட்டப் பணிகள் முடிவுற்று இவ்வாண்டு ஐப்பசித் திங்கள் 3ம் நாள் (20-10-2023) வெள்ளிக்கிழமை அன்று திருக்குட நன்னீராட்டு காண இருக்கின்றது. 15ம் நூற்றாண்டில் வாழ்ந்து, பத்தியும் இலக்கியமும் ஆன 16000 இசைப்பாடல்களை கொண்ட **“திருப்புகழை”** அருளிச் செய்த பெருமகனாரான அருணகிரிநாதர் பெருமானுக்கு திருக்கோயில் அமைப்பது போற்றுதலுக்குரியதாகும்.





இத்திருக்கோயிலானது திருவண்ணாமலை அண்ணாமலையாரின் திருவடிகளில் அமையபெருகின்றமை இறைவன் திருவருளேயாகும். எனவே நாம் அனைவரும் திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள திருக்குட நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று, அருணகிரிப் பெருமானை வணங்கி போற்றி உய்வு பெறுவோமாக.

**திருச்சிற்றம்பலம்**


தென்னாடு
செந்தமிழால் சிவமும், கொடைத்தமிழ், வாழ்வியல். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# ஏக இறைவனுக்கு மொழி உண்டோ

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு** - (குறள் - 423)

ஏக இறைவனுக்கு மொழி உண்டு என்று சொன்னால் நகைப்பாக பார்க்கும் ஒவ்வொருவரும், இறைவனுக்கு ஒரு குறிப்பிட்ட மொழியினால் தான் வழிபடவேண்டும் என்று எண்ணுவது நகைப்பாகவுள்ளது. விருப்பு, வெறுப்பு, மொழி, என்று எல்லாம் கடந்தவர் இறைவன். அவரை ஒரு மொழிக்குள் அடக்குவது அல்லது அடக்க நினைப்பது என்பது இறைவனைப் பற்றி ஒருவர் வைத்திருக்கும் அறிவினையே வெளிப்படுத்தி நிற்கிறது.

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும் - திருக்குறள் 28** - திருக்குறள் 28

நிறைவான மொழிகளையே சொல்லும் சான்றோரின் பெருமையை, உலகத்தில் நிலையாக விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும். இங்கு மறைமொழிகள் என்றால் என்னவென்று பார்த்தால்,

**“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப”.**

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் ( 1484 ) இருந்து அறியலாம். தமிழர் மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு ஆகும். இந்த வழியில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் வீடுபேறு அடைய நிறைமொழி மாந்தர் மறைமொழி தான் வழிநிற்கும் என்பதே வாழ்வியல் தத்துவம்.

அத்துடன் மந்திரம் என்பது ஒலியே தவிர மொழி அல்ல. அந்த ஒலியினை எந்தமொழியிலும் சொல்லலாம் என்ற அடிப்படைத் தன்மையை நாங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். மேலும் உயிர் இலயமாகி உணர்வுபூர்வமாக சொல்லாத மந்திரங்கள் பயனற்றே போகும். உதாரணமாக ஒரு கைபேசியிலோ அல்லது வானொலியிலோ மந்திரத்தினை போடுதல் பயன்தருமா என்று பார்க்கும் போது இல்லை என்றே விடைவரும். ஏனெனில் மந்திரம் பயன்தர உயிர் வேண்டும். உயிர் வேண்டும் என்பதன் பொருள் என்னவென்றால், உயிரானது உணர்வாக மந்திரத்துடன் இலயிக்கவேண்டும். அப்படி இலகிக்க அந்த வழிபாட்டில் வரும் மற்றைய கிரிகைகள், வேண்டுதல்கள் வழிபடுமவருக்கு புரியவேண்டும்.

இனி ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம். **தமிழர்களாகிய நாங்கள் ஒரு வேண்டுதலை (நேர்த்தி) வைக்கும் போது மனதில் உச்சரிக்கும் மொழி என்ன ? வேற்றுமொழியா ?தமிழ் தானே.** அந்த வேண்டுதல் பலிக்கும் போதும் அம்மாளாச்சியே, அப்பனே சிவனே மற்றும் அப்பனே முருகா என்று தமிழில் தான் நன்றியையும் தெரிவிக்கிறோம். பொங்கலைப் பொங்குகிறோம். காவடி எடுக்கிறோம். அங்கவலம் வருகிறோம். ஆகவே தமிழர்களாகிய நாம் தமிழில் , உயிர் இலகிக்க உணர்வுடன் வழிபடுதலே வழிபாட்டின் பயனைத் தரும். அதுபோல் ஆங்கிலம், சிங்களம், மற்றும் சமசுகிருதம் போன்றமொழிகள் நன்றாக இலகிக்கும் வண்ணம் மொழி ஆளுமை இருக்குமிடத்து நிச்சயமாக அதிலேயும் செய்யலாம். ஒரு குறையுமில்லை ஒரு தடையுமில்லை. ஆனால் தமிழில் செய்யக்கூடாது. அது ஆகமத்தில் இல்லை. பலன் தாராது என்று மக்களை திசை மாற்றாமல் சமயப் பெரியோர்கள் உண்மையறிந்து பேசவேண்டும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# அடியவரின் எளிமையான கேள்விகளும் திருத்தொண்டரின் ஆழமான பதில்களும்


திருத்தொண்டர் முனைவர்
இராமகிருஷ்னன் சிவகுமார்
( பினாங்கு அறிவியல்
பல்கலைக்கழகம் )

**ஆன்மீகம் என்பது தமிழ் சொல்லா ஐயா ?**

**ஆம். தூய தமிழ்ச் சொல்தான்.**

ஆதன் = ஆ(கு) + தன் (தான் என்னும் படர்க்கைப் பகரப் பெயர், பிரதிப்பெயராக, வேற்றுமையுருபை ஏற்கு மிடத்துப்பெறுந் திரிபு ; oblique case-form of the pronoun tān.

ஆதன் என்பது ஆகின்ற அல்லது ஆகும் உயிர்பொருள் என்று பொருள்படும் வாழி ஆதன் வாழி அவின் – ஐங்குறு நூறு (10)

ஆத்மா= ஆன்மா (ஆன் +மா : ஆன<ஆகு பொருள் + மா -பெரிது )

தொல்காப்பியர் “ஆதனும், பூதனும் கூறிய இயல்போடு பெயரோற் றகரந் துவரக் கெடுமே (தொல். சூ 348) என்ற ஓர் இலக்கணம் வகுத்துள்ளார்.

ஆதன் பூதன் என்ற சொற்கள் ஆதன் - ஆத் புதன்- பூத் என்று குறை உரிச் சொற்களாக மெலிந்து தொல்லோரது வழக்காறு பேணும் என்பது இதன் இலக்கணமாகும்.

ஆதன் என்னும் இயற்பெயருக்கு ஆ → ஆகு என்பதே முன்னிலையாக அமைந்துள்ளது.

ஆ → ஆகு → ஆதல் = தோன்றுதல், வளர்தல், செழித்தல்

ஆ → ஆதன், மக்களுட் சிறந்தோனைத் தோன்றல் என்றழைப்பதைப்போன்றே ஆதன்

ஆ - முன்மையும் முதன்மையும் சுட்டிய சொல்லாதலின், ஆ → ஆது → ஆதன் (முன்னவன், தலைவன்) தலைமைப் பொருள் தரும் செந்தமிழ்ச் சொல் என்று தெளிவாகிறது. இதனை அறியாதார் இதனை ‘அர்ஹத’ என்னும் வடசொல்லின் சிதைவாக்கிக் கூறுவர்.

முறைப்பெயர் - ஆதன் (அத்தன் → ஆத்தன் → ஆதன்)

ஆதன் (Atan) -> Adam( ஆடம் )

ஐ ஆ → ஆகு ->ஆதன் → ஆதாம் ஸ

ஐ ஆ → ஆகு ->ஆள் → ஆளன் → ஆடன் ஸ

ஆத்மீகம் = ஆத் (ஆதன்) + மீ ( கடப்பு) + இகம் ( இப்பிறவி, உலகம், இடம் )

இம்மை இகமொடு பரமும் (கந்தபு. திருவிளை. 105)

ஆகவே ஆன்மீகம் = ஆத்மா, ஆன்மா (ஆன் + மா : ஆன < ஆகு பொருள் + மா -பெரிது ) + மீ ( கடப்பு) + இகம் ( இப்பிறவி, உலகம், இடம் ) என்று பொருள்படும்.

**நட்சத்திரம் என்பது தமிழா ஐயா?**

**ஆம். தூய தமிழ்ச் சொல்தான்.**

நள் + அச்சு + திரம் - நள்ளிரவில் அச்சு வடிவாகத் திரண்ட வடிவம். நள் (அடர்)

**பஞ்ச என்பது தமிழ் சொல்லா ஐயா**

**ஆம். தூய தமிழ்ச் சொல்தான்.**

பஞ்சு என்ற சொல்லுக்குப் பருத்தி என்ற பொருளுண்டு. இந்தப் பருத்தியில் விளையும் காயில் பெரும்பான்மையும் ஐந்து அறைகள் உண்டு. கையில் உள்ள ஐந்து விரல்களைப் போல பருத்திக் காயானது ஐந்து பிரிவுகளாக விரியும். இதன் அடிப்படையில் உருவானதே ஐந்து என்னும் எண்ணிக்கையைக் குறிக்கும் பஞ்சம் என்ற சொல்.

பஞ்சு (=பருத்தி) >>> பஞ்சம் = ஐந்து.

ஐந்தைக் குறிக்கும் பஞ்சம் என்ற சொல் தமிழே என்று இதனான் அறியலாம். பஞ்சம் என்ற தமிழ்ச் சொல்லையே பாஞ்ச், பஞ்ச என்று பிறமொழிகள் வழங்குகின்றன. தமிழே மூலம்.

# இவ்வாண்டு பவளவிழாகாணும் முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள்



இறைவன் காலத்திற்கு காலம் அருளாளர்களையும் ஆற்றலாளர்களையும் எமக்கு தந்து கொண்டிருப்பார். அந்தவகையில், இறைவனை அனைவரும் அர்ச்சிக்கலாம், அதுவும் இறைமொழியாகிய தெய்வத்தமிழிலே அர்ச்சிக்க வேண்டும் என்பவற்றை முன்வைத்து, அமைதியை நிலை நாட்ட நெற்றிக்கண்ணிலிருந்து ஆறுமுகன் உதித்தது போல், தமிழ் நெறியை காத்திட உதித்தவரே முதுமுனைவர். மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள்.

அகவை எழுபத்தைந்தில் தடம் பதிக்கும் முதுமுனைவர். மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள், இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து அவரது சேவையை தொடர்ந்திட வேண்டி, அருள்மிகு தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைத்து போற்றுவதோடு, வாழ்த்தியும் மகிழ்கின்றோம்.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.**

**தெய்வத்தமிழ் அறக்கட்டளை நிறுவுனர் / இயக்குநர் முதுமுனைவர். மு. பெ. சத்தியவேல் முருகனார் அவர்களின் சாதனைச் சுவடுகள்**

- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அத்தை பேரன் - மருமகன். அவரிடம் ஆச்சாரிய அபிடேகம் பெற்றவர்.
- தூய தமிழ்க்காவலர் தெய்வத்திரு.கு.மு. அண்ணல் தங்கோ அவர்களின் தம்பி திருப்புகழ்சிவம், விடுதலை போராட்ட வீரர், தெய்வத்திரு. வேலூர். மு. பெருமாள் அவர்களின் புதல்வர். தாயார் மு.பெ.காமாட்சி அவர்களும் விடுதலை போராட்ட வீராங்கனை.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மின்னியலில் பட்டம் பெற்ற பொறியாளர். தமிழில் M.A., M.Phil பட்டம் பெற்றவர்.
- பாரத் பல்கலைக் கழகத்தால் தெய்வீக முதுமுனைவர் Doctor of Divinity - என்ற பட்டம் பெற்றவர்.
- அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் தமிழ் இலக்கியத்தில் முதுமுனைவர் பட்டம்– Doctor of Literature– பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 23 ஆண்டுகள் பொறியாளராகப் பணி ஆற்றி ஆன்மிக ஆகமத் தமிழ்ப் பணிக்கெனவே விருப்ப ஓய்வு பெற்றவர்.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏறத்தாழ 1674 குட நன்னீராட்டுகளை தனித்தமிழ் மந்திரங்களால் ஆற்றியவர்.
- ஏறத்தாழ 6700க்கு மேல் தமிழ் திருமுறை திருமணங்கள் மற்றும் வாழ்வியல் சடங்குகளை ஆற்றியவர்.
- இதுவரை 136 நூல்கள் இயற்றி வெளியிட்டவர். அவற்றில் சில ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்கள்.
- தமிழ்வழிபாட்டிற்காக பல வழக்குகளைச் சந்தித்து வெற்றி பெற்றவர். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் பயிற்சி திட்டத்திற்கென அரசு நியமித்த நீதியரசர் திரு.A.K.ராஜன் குழுவின் ஆய்வறிக்கை தயாரிப்பில் ஒல்லும் வகையில் எல்லாம் பங்குபணி ஆற்றியவர். அதற்கு நீதியரசர் அந்த ஆய்வறிக்கையிலேயே நன்றியும் தெரிவித்திருக்கிறார்.
- மேற்படி அரசு திட்டத்திற்காக அரசு அமைத்த அர்ச்சகர் பாடதிட்டக் குழு உறுப்பினர்.
- அரசு வழிகாட்டுதலில் இந்து அறநிலையத் துறை அமைத்த அர்ச்சகர் மேலாண்மைக்குழு மற்றும் ஓதுவார் மேலாண்மைக்கு உறுப்பினர். அரசு அமைத்த அர்ச்சகர் பயிற்சிக்கு இவரது சில நூல்கள் பாடங்களாக வைக்கப்பட்டன.
- அனைத்து சாதியினர் அர்ச்சகர் பயிற்சித் திட்டத்திற்கு எதிராக சிலர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போது அரசுடன் இணைந்து இணை மனுதாராக உச்சநீதிமன்றத்தில் நேர் நின்று வாதிட்டவர்.
- மேற்படி வழக்கில் வந்த தீர்ப்பின் விளக்கமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் கையடக்க நூல் வெளியிட்டவர்.
- S.R.M. பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற அடிப்படையில் 9 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் அருத்சுனைஞர் பட்டய வகுப்பு நடத்தி வருபவர்.
- மேற்படி பட்டய வகுப்பிற்கு பாடநூல்களை 8 தாள்களாக அமைத்து தந்தவர். அவை (UGC) பல்கலைக்கழக மானியக் குழுவாலும் ஒப்புதல் அளிக்கப்பட்டவை.



- இதுவரை 9 ஆண்டுகளில் தமிழருட்சுனைஞர் பட்டயம் பெற்ற மாணவர்கள் 839 பேர் அவர்களில் 138 பேர் பெண்கள்.
- மேற்படி பட்டயம் பெற்ற 500 மாணவர்களுக்கு பெரியார் அவர்களின் நினைவாக திராவிடக் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் திருக்கரத்தால் “செந்தமிழ் ஆகம அந்தணர்” என்கிற அடையாள அட்டை வழங்கப்பெற்றது.
- எண்ணிலும் எழுத்திலும் முற்றிலுமாக தமிழே வழங்க தமிழ் நாட்காட்டியை உருவாக்கியவர். அது அமெரிக்க லொயொலா மேரிமவுண்ட் பல்கலைக் கழகத்தால் (Loyola Marymount University) தத்தெடுத்துக் கொள்ளப்பட்டது.
- மொரீசியஸ் நாட்டிற்கான முழுக்க முழுக்க தமிழ்ப் பஞ்சாங்கம் (2012 - 13) உருவாக்கித் தந்தவர்.
- மொரீசியஸ் நாட்டின் தமிழ் கோயில்களின் கூட்டமைப்பினால் அதன் ஆலோசகராக நியமிக்கப்பட்டவர்.
- ஒன்றிய அரசின் அமைப்பான செம்மொழி உயராய்வு மையத்தின் சார்பாக மறைந்த டாக்டர் கலைஞர் அவ்வமைப்பின் தலைவராக இருந்தபோது அவரது ஆணைப்படி தமிழ்ப் பஞ்சாங்கம் அதாவது “ஐந்திறம்” ஒன்றினை உருவாக்கிய குழுவில் முக்கிய பங்காற்றியவர்.

இலங்கையிலும் பலர் இவரது நூல்கள் புத்தகங்களை பயன்படுத்தி தெய்வத்தமிழ் வழிபாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நூலகத்திலும் ஐயாவினுடைய பெரும்பாலனான நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் எங்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்திபன் அவர்களும், முதுமுனைவர். மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்களிடத்தேயே இரண்டாம் தீக்கை என்று சொல்லப்படுகின்ற நோன்மை தீக்கை (விசேட தீக்கை) பெற்றார். இன்று அவர் ஒசுத்திரேலியாவில் பல வாழ்வியல் சடங்குகளை தெய்வத்தமிழிலே ஆற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய நாளில் ஈழத்திலும், வெளிநாடுகளிலும் இவருடைய சீடர்கள் பலரும் பல திருக்கோயில்களில் பூசகர்களாக பணியாற்றி வருகின்றனர்.



மேலும் வெளிநாடுகளில் வாழ்வியல் சடங்குகளையும், திருக்குட நீராட்டுகளையும் செய்து வருகின்றனர். இவ்வாறு தெய்வத்தமிழ் வழிபாடானது எங்கும் பரவி நிலைத்து நிற்பதற்கு ஆணிவேர் முதுமுனைவர். மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்களே என்றால் மிகையாகாது. எனவே தமிழ் நெறியை காத்திட நாமும் அவருடன் துணை நின்று திருவருள் பெற்று உய்வோமாக - ஓம் நமசிவாய.

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தேடுவோம் தெளிவோம்

**“தேடல்”** என்பது மனித வாழ்வியலை அடுத்த கட்டத்திற்கு நெறிப்படுத்தும் விடயமாகும். தேடிய பின்னரே தெளிவை அடையலாம். எனவே கற்கும் கல்வியிலும் அறிவியல் கருத்துக்களிலும் கூட உண்மையின் தன்மையை உறுதிச் செய்வதற்கான தேடல் இருக்க வேண்டும். தேடல் என்பது இன்றைய வாழ்வில் அவசியமாக உள்ளது. யார் ஒருவன் தன்னுடைய தேடலைத் தொடர்கிறானோ அவனே எங்கும் முன்னிலை வகிக்கின்றான்.

இன்றைய நாட்களில் சமூக வலைத்தளங்களில் அதிகம் முன்வைக்கப்படுகின்ற விடயமாக, மகாகவி பாரதியாருடைய **“நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ”** என்ற வரிகள் அமைகின்றது. இதை பலரும் தங்களை மிகைப்படுத்தும் வரிகளாக பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அவர் முன்வைத்த பாடல் யாதெனில்,

**தேடிச் சோறுநிதம் தின்று - பல**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாட பலசெயல்கள் செய்து - நரை**
**கூடி கிழப்பருவ மெய்தி - கொடும்**
**கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல**
**வேடிக்கை மனிதரை போலே - நான்**
**வீழ்வேனென்று நினைத் தாயோ?** என்பதாகும்.

இப்பாடலில் அவர் வேடிக்கை மனிதரை போல் வீழ்வேன் என்று நினைத்தாயோ என்பதை கூற விளைகிறார். அதில் **“ தேடிச் சோறுநிதம் தின்று”** என்ற முதல் வரிகள் கூறுவது, சிறந்த மனிதனுடைய தேடல் உணவை மட்டுமே நோக்கியதாக அமையாது என்பதாகும். அதாவது எங்களுடைய தேடல் வாழ்வை மேன்மையாக்குவதாக அமையவேண்டும். அதற்கு எங்கள் தேடல் இறைவனை நோக்கியதாக அமைய வேண்டும்.

இறைவனைத் தேட வேண்டுமாயின் நாம் திருக்கோயில்களை அடைய வேண்டும். பசுவின் உடலில் உள்ள குருதிதான் பாலாக மாறினாலும் பசுவின் மடியில் கறந்தால்தான் அது பாலாகக் கிடைப்பதுபோல், பரம்பொருள் எங்கும் எதிலும் பரவி இருப்பினும் அப்பரம்பொருளின் திருவருள் வெளிப்பட்டு விளங்கும் அருள் மையமாகத் திருக்கோயிலை அறிவியல் ஆராய்ச்சியுடனும் அருள் விளக்கத்துடனும் நம் முன்னோர் அமைத்துள்ளனர்.

திருஞானசம்பந்தப்பெருமான் ஐந்தாம் திருமுறையில்,

**“தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்**
**நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்**
**ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ**
**ஓடிப் போம்நம துள்ள வினைகளே”**

என்று குறிப்பிடுகின்றார். அதாவது நாம் சிவபெருமானைத் தேடிச் சென்று போற்றி வணங்கினால், அவர் நம்மை நாடி வந்து அருள்புரிவார் என விளக்குகின்றார். திருமூலரும் பத்தாம் திருமுறையில்,

**“நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெரு மான்என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே.”** என்று குறிப்பிடுகின்றார்.

நாயன்மார்களும் சித்தர்களும் தமது தேடலை இறைவன் பால் செலுத்தியே திருவருள் கண்டுள்ளனர். எனவே நாமும் எமது தேவையற்ற சிந்தனைகளை தவிர்த்து, இறையியல் நோக்கிய தேடலை மிகைப்படுத்தி தேடுவோம்! தெளிவோம்! பரம்பொருளை போற்றி வழிபடுவோமாக !

மேலும் உங்கள் தேடலை இலகுபடுத்தும் நோக்கோடு, எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், **“தேடல்.org” (www.thedal.org)** என்ற வலைத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வலைத்தளத்தில் நீங்கள் ஓர் தலைப்பை தேடுகின்ற பொழுது, அந்த தலைப்பானது குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள், இதழ்கள் ஆகியவற்றோடு, அத்தலைப்பானது எந்த பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விடயத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கின்றோம்.

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**பிள்ளையாரின் தோற்றம் குறித்து ஏராளமான கதைகள் உண்டு. உமாதேவியார் பிள்ளையாரினை உருவாக்கியபோது சிவபெருமான் கழுத்தினை அறுத்தார் என்றும் பின்னர் யானை முகம் ஒன்றினைப் பொருத்தி உயிர்ப்பித்தார் என்றும் கதைகள் உண்டு. அவை சரியா?**

*சைவசமயத்தவர்களாகிய நாங்கள் எங்களுடைய சமய நூல்களில் என்னென்ன கூறப்பட்டுள்ளன என்பதினையும் அதில் என்னென்ன நூல்கள் என்னென்ன தரத்தில் கொள்ளப்படுகின்றன என்பதிலும் எதனை சைவசமயத்தார் கொள்ளவேண்டும் என்பதிலும் தெளிவு இருத்தல் வேண்டும். வேத புராணங்களினைக்காட்டிலும் சிவாகமங்கள் பிரமாண வலுக்கூடியவை என்பதிலும் சிவாகமங்களினைக் காட்டிலும் சிவாகம ஞானபாதமாக விளங்கும் பன்னிருதிருமுறையும் மெய்கண்டசாத்திரங்களும் பிரமாண வலுக்கூடியவை என்பதிலும் சைவர்களுக்குத் தெளிவு வேண்டும். ஆகமங்களில் மாமிச உணவுகள் கூறப்பட்டிருப்பினும் கொல்லாமை போதிக்கும் திருமந்திரம் முதலிய திருமுறை சாத்திரவழி அங்ஙனம் படைக்காது தவிர்க்கும் வழக்கு இதற்குத் தக்க சான்றாகும். எனவே, திருமுறைகளுக்கு விரோதமாக எதுவும் புராணங்களில் உண்டென்றால் அவையெல்லாம் தள்ளத்தக்கவையேயாகும்.*

*திருஞானசம்பந்தப்பெருமான், சிவபெருமானும் உமாதேவியாரும் ஆண் யானை பெண் யானை வடிவெடுத்து சிவனடியார் துயர் நீங்க அருளிய இறைவடிவே பிள்ளையார் என்று “பிடியதன் உருவுமை” முதலிய தேவாரங்களில் அருளிச்செய்துள்ளார். சைவர்களுக்கு இதுவே தக்க விளக்கமுமாகும். ஓங்காரவடிவாய் சிவபெருமான் கொண்ட திருவுருவமே பிள்ளையார் என்பதுதான் சைவமுடிவு.*

*தலைவெட்டிய கதை சிவாகமங்களிலும் இல்லை. நாயன்மார் காலத்திலும் இப்படியொரு கதை புழக்கத்தில் இருக்கவில்லை. இக்கதை சில புராணங்களில் பிற்காலத்தில் பிறழானவர் சிலரால் இட்டுக்கட்டப்பட்ட கதையாகும். பிள்ளையார் வழிபாட்டினைப் போற்றிய நம்பியாண்டார் நம்பிகள், கபிலதேவ நாயனார், ஔவையார் முதலியோரும் இக்கதையினை ஏற்றுப்பாடியிருக்கவில்லை. விநாயகபுராணத்திலும் இக்கதை இல்லை. அருணகிரிநாதர் முதலிய பிற்கால அருளாளர்களும் இக்கதையினை ஏற்றுப் பாடியிருக்கவில்லை.*

*தொலைக்காட்சி முதலியவற்றில் தலையினைவெட்டிய கதைகளே சுவாரசியமாக உள்ளதென்பதினால் பரப்பப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலத்தில், எங்கள் பிள்ளைகளுக்கு திருமுறைவழி நின்று பிள்ளையாரின் தோற்றத்தினை விளக்கிக்கூறுதல் வேண்டும். சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு சைவ மரபு வழி பிசகாது சைவக்கதைகளினைக் கூறிவருதல் கடமையாகும்.*

*இலங்கைப் பண்பாட்டினைக் கந்தபுராணக் கலாசாரம் என்பர். கந்தபுராணமும் சிவபெருமானும் உமாதேவியாரினதும் திருப்பார்வையில் பிரணவம் சமட்டி வியட்டிப் பிரணவமாக வடிவங்கொண்டு இணைந்து தோற்றுவித்த வடிவமே பிள்ளையார் வடிவம் கூறுவதும் திருமுறையில் கூறப்பட்டுள்ள செய்தியின் தத்துவ விளக்கத்தினை உணர்த்தும் வகையிலேயாகும்.*

**பிள்ளையார் வழிபாடு காணபத்திய வழிபாடா?**

*காணாபத்தியம் முதலியன சைவசமயத்தில் உள்ள வழிபாடுகளினைத் தனித்தனியே உடைத்து சைவசமயத்தினை வீழ்த்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட பிற்காலச் சொற்பதமேயாகும். ஔவையார், நம்பியாண்டார் நம்பிகள், கபிலதேவ நாயனார், அருணகிரிநாதர் என்று யாருமே பிள்ளையாரினை சைவத்துக்குப் புறம்பான காணபத்தியத் தெய்வமாகப் பாடியிருக்கவில்லை. பிள்ளையாரினைச் சிவக்களிறு என்றே நம்பியாண்டார் நம்பி பெருமான் அருளிச்செய்துள்ளார். விநாயகர் வழிபாட்டின் பயன் சிவப்பேறே என்பதினை விநாயகர் அகவலில் ஔவையாரும் பாடியருளியுள்ளார்.*

**“தேசத் தவர்தொழும் நாரைப்பதியுட் சிவக்களிறே”** *- பதினொன்றாம் திருமுறை திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை.*

**சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி சித்தத்தினுள்ளேசிவலிங்கம் காட்டி** *- ஔவையார் அருளிய விநாயகர் அகவல்*

*வைணவசமயம் என்றால் அதற்கென்று தனித்த ஆகமங்கள் உண்டு. திருமாலினை பரதெய்வமாக முன்னிறுத்தி வாழ்ந்த தனித்த அருளாளர் பட்டியல் உண்டு! தனித்த சமயக்கொள்கை உண்டு! காணபத்தியம் என்பதற்கு இப்படியொரு வரலாறு இல்லை! ஆதிசங்கரர் காணபத்தியம் முதலிய சமயங்களினை நிறுவினார். என்பது கடந்த இருநூறு ஆண்டுகளில் உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டுவரும் போலிக்கதையேயொழிய, உண்மை வரலாறு அன்று!*

*சிவபெருமானே விநாயகவடிவாய் நின்று அருளுகின்றார் என்பதினைக் கந்தபுராணத்தின் கயமுகன் உற்பத்திப் படலத்தில் கச்சியப்ப சிவாச்சாரியப் பெருமான் அருளிச்செய்திருப்பதினாலும் உணர்ந்து தெளியலாம்.*

**ஒருமையால் உணருவோர் உணர்வினுக்கு உணர்வது ஆம்**
**பெருமையான் எங்கனும் பிரிவு அரும் பெற்றியான்**
**அருமையான் ஏவரும் அடி தொழும் தன்மையான்**
**இருமை ஆம் ஈசனை என்ன நின்று அருளுவான்** - *கந்தபுராணம்(9334)*

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# சமூக கடமை

நேரான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது உருவாகும் வீண் விமர்சனங்களுக்கும் வசை மொழிகளுக்கும் நாம் விளக்கம் சொல்லத் தேவையில்லை. மனதில் உறுதியும், நீண்ட எதிர்காலத்துக்கான தூர நோக்கும் எம்மிடம் இருக்கும் போது எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் வளம் மிகுந்த எதிர்காலத்தை நோக்கியே எமது பயணம் அமைய வேண்டும். சைவ வழியில் இன்றைய இளையவர்கள் பயணப்படும் போது, அதற்கு எதிராக பேசவும், துறவு குறித்த புரிதல்கள் இல்லாமல் 'சாமியாகப்போகிறான்' என்று பேசவும் ஒரு கூட்டம் எம்மத்தியில் இருக்கின்றது. நெற்றி நிறைய திருநீறு அணிந்து செல்லும் இளையவர்களை வித்தியாசமாகப் பார்பதும், அந்தப் பார்வைகளுக்கு வெட்கப்பட்டு பல இளையவர்கள் திருநீறு அணிவதைத் தவிர்ப்பதுமாக இன்றைய சூழல் உள்ளமை நாம் அறிந்ததே! எமது சமயநெறி வாழவேண்டுமாயின் சித்தாந்த தத்துவத்தோடு சமய அடையாளங்களும் வாழ வேண்டும். அது தான் எம்மை சமூகத்துக்கு அறிவிப்பதோடு நாம் தூய சமய நெறியை சேர்ந்தவர்கள் என்ற குறியீடாகவும் அமையும்.

சமணசமயம் அரசணையில் இருந்த காலத்தில் திருநீற்றுடன் ஒரு சைவர் எதிர்ப்பட்டால் தம் தலையில் அடித்து கண்ணை மூடிக்கொண்டு செல்வார்களாம் சமணர்கள்! ஞானசம்பந்தப்பெருமானும் அப்பர்சுவாமிகளும் மிகுந்த பாடுபட்டு அக்கொடுமைகளை எல்லாம் அகற்றி சைவத்தை மீள் எழுச்சிக்கு உள்ளாக்கி எம் கைகளில் தந்தார்கள்! அவர்களின் அருள்வளத்தாலும், ஆற்றலாலும் கிடைத்த சைவத்தையும், அதன் அடையாளங்களையும் பேணாமல் இன்று எமக்குள்ளேயே சமணர்களாய் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நல்லூர்ப் பெருந்திருவிழாக் காலத்தில் கூட சனநெரிசல் உண்டாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு மக்கள் கூட்டம் அலை அலையாக வந்தது என்பதை நாம் அறிந்தோம். எனினும் கவலை என்னவெனில் உதட்டுச் சாயமும், முகபூச்சுக்களுடனும் வந்த இளம்பெண்கள் சேலை கட்டினால் மட்டும் சைவத்தமிழ் அடையாளம் வெளிக்காட்டப்படும் என்ற நிலையில் இருந்தார்களே தவிர, திருநீறு முதலான சமய அடையாளங்களைப் பேணியவர்கள் மிகச் சொற்ப அளவினரே!

சமயத்தை சமயம் பார்த்துக் கடைப்பிடிப்பவர்களும், தமக்கு ஏற்றது போல சமய நெறிமுறைகளை மாற்றிக் கொள்பவர்களும், சமயத்தின் பெயரால் கேளிக்கைகளில் ஈடுபடுபவர்களும் கண்டிக்கத்தக்க வகுதியினரே! சைவ சமயத்தின் மீது நம்பிக்கை கொண்டு அதன் நெறிமுறைகளில் பற்றுக்கொண்டு வெளிநாட்டவர்களும் இன்று சைவ சமயத்தைப் பின்பற்றி ஒழுக இந்த மண்ணுக்கு விரும்பி வரும் போது, இந்த மண்ணிலே சைவசமயிகளாகவே பிறந்த நாம் இங்கு இங்கனம் உழல்வது எம் தவக்குறைவேயாகும். எனவே காலம் போகும் முன் எம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டியது அவசியம்!

சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் அவர்களது, பால பாடம், பால போதினி, சைவ வினாவிடை போன்ற அரிய நூல்கள் சைவ சமயத்தை நாம் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதை அடிப்படை அறிவிலிருந்தே எமக்குள் புகட்டும் திறன் வாய்ந்தவை. இன்று அந்நூல்களுக்கான தேடலும் கேள்வியும் மக்களிடத்தில் இன்மையால் அவற்றை கணனிமயப்படுத்தி அச்சிட்டு மீள் பதிப்பு செய்வதற்கு அரசோ தனியாரோ பெருமளவில் அக்கறை காட்டாமையால், சைவசமயம் பற்றிய விழிப்புணர்வு அருகி எம் அடையாளங்களை பிழையாக முன்வைப்புச் செய்யும் ஒரு இளைய சமுதாயம் உருவாகி விட்டதோ என எண்ணத்தோன்றுகிறது. சைவ சமயச் சின்னமான உருத்திராக்கத்துக்குப் பதிலாக கருங்காலி மாலையை திரைப்பட நடிகர்களைப் பின்பற்றி அணிந்து கொள்வதற்கு அவாப்படுவதும், சைவம் பற்றிய ஆழமான அறிவு இன்றிப் பொதுவெளியில் கருத்துப் பகிர்வதும் காலத்தின் கொடுமைகள்!

எப்போதும் இளையவர்கள் மீது நாம் குற்றம் சுமத்துகின்றோம் என்பது சில வேளை சிலருக்கு எரிச்சலூட்டினாலும், இது சமூக சமயக் கடமை என்பதில் நாம் தெளிவோடு உள்ளோம். சிவபூமியான இந்த மண்ணில் தூய சைவசமயநெறி நீடு வாழ நாம் எல்லோரும் ஒன்றாக எம் அடையாளங்களைப் பாதுகாப்போமாக!

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# மாவையூர் முருகனாரே!

சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற ஈழத்தின் தலைப்பீடமாக அமர்ந்திருப்பது யாழ்ப்பாணம். அந்த யாழ்ப்பாணத்தினுடைய மறுபெயர் கந்தபுராண கலாசார பூமி. யாழ்ப்பாணத்தினுடைய மூலை முடுக்குகள் எல்லாம் முருகனுடைய வழிபாடு பரவிப் பெருகி இருந்திருக்கிறது, பரவிப் பெருகி இருக்கின்றது, பரவிப் பெருகி இருக்கும். அந்த வகையிலே யாழ்ப்பாணத்து முருகன் கோயில் களிலே மிகவும் பிரசித்தி பெற்ற கோயில்கள் என்று சில இருக்கின்றன. நல்லூரிலே அருள் பாலித்து கொண்டு இருக்கின்ற நல்லூர் கந்தசாமி கோயில். தொண்டைமானாற்றின் கரையோரத்தில் அமர்ந்திருந்து அருள் பாலிக்கின்ற செல்வச் சந்நிதி முருகன் கோயில். வலிகாமத்தினுடைய வடபகுதியில் இருந்து ஆட்சி செய்கின்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோயில். இவை தவிர பழமை வாய்ந்த முருகன் கோயில்கள் யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் தோறும் இருக்கின்றன.

இதிலே தொன்மையான கோயில்கள் என்ற வரிசையிலே பார்க்கின்ற போது, அறிந்த வகையில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முதன்மை பெற்றிருக்கிறது. நல்லூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த யாழ்ப்பாண இராச்சியத்தினுடைய அரச கோயில் நல்லூர். அதேபோல கதிரைநகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் பண்டைய தலைமைக்கோயில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில். ஒரு காலத்தில் இவ்விரண்டு கோயில்களுடைய திருவிழாக்களும் ஆடி மறைமதியை (அமாவாசை) ஈறாகக்கொண்டு இடம்பெற்றன என்றும் அதன் காரணமாக சனத்திரளானது மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை நோக்கி நகர, நல்லூர் கந்தசாமி கோயில் சனப் பற்றாக்குறையினை எதிர்கொண்டது என்றும், இதனால் நல்லூர் கந்தசாமி கோயிலுடைய திருவிழாக்காலம் மாற்றப்பட்டது என்றும் செவிவழி கதைகள் கூறுகின்றன. இது உண்மையோ பொய்யோ என்பது ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டிய விடயம். ஆனால் முற்காலத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் யாழ்ப்பாணத்திலே மேன்மையுற்று இருந்தது என்பது பெருஞ்சான்றோர் அது வாக்கு.

ஈழத்திலே முப்பது வருடங்கள் இடம் பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக வலிகாமப்பகுதியினுடைய வட பகுதி பல இடைஞ்சல்களை எதிர்கொண்டது. இராணுவ ஆக்கிரமிப்புகள் ஒரு பக்கம் நிகழ ஆதிக்குடி மக்களுடைய வெளியேற்றம் மறுபக்கம் நிகழ்ந்தது. பெரும்பாலான மக்கள் வலிகாமப்பகுதியில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணத்தின் நகர் பகுதிகளில் குடியேறினர். இன்னும் சிலர் யாதும் ஊராகக் கொண்டு புலம்பெயர்ந்தனர். இன்று யாழ்ப்பாணத்தினுடைய முக்கிய கோயிலாக நல்லூர் கந்தசாமி கோயில் தலைமை பெற்று விளங்குகிறது. அந்தக் கோயிலுடைய பெருமைகளையும், புகழையும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் போற்றிப் பேசுகின்றனர். தமிழர் அல்லாத சிங்களவர் மத்தியிலும் சில பல வெளித் தேசத்தவர்கள் மத்தியிலும் நல்லைக் கந்தனுடைய புகழ் பரவி இருக்கிறது. இதை நினைத்து யாழ்ப்பாணத்தவர்கள் பெருமை கொள்வதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால் மறுபுறம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உடைய தற்போதைய நிலையும் கவனிக்க வேண்டிய வகையில் தான் இருக்கிறது.

அற்புதங்கள் நிகழ்ந்தேறி இருக்கின்ற திருமுறைக் கோயில்கள் புகழ்பெற்று விளங்குகின்ற தமிழ்நாட்டிலே, சோழ நாட்டின் கண் வாழ்ந்த சோழ இளவரசி தன்னுடைய மனக்கவலையை மாற்ற தமிழ்நாட்டை விடுத்து ஈழம் வந்து, மாவைக் கந்தனின் அருள் பெற்று உய்ந்தாள் என்பது வரலாறு. மாவைக்கந்தனுடைய சிறப்பைச் சொல்வதற்கு இதைவிட வேறு எந்த உதாரணங்களும் தேவையில்லை. ஆனால் நிகழ்காலத்திலே நாம் அதனை அறிந்து போற்றத் தவறிவிட்டோம்.

புகழில் முருகனுக்கு எதுவித பிரச்சனையும் இல்லை. நல்லையில் இருக்கிற முருகரும் ஒருவர் தான், நாமக்கலில் இருக்கின்ற முருகரும் ஒருவர் தான் மாவிட்டபுரத்தில் இருக்கின்ற முருகரும் ஒருவர்தான். ஆனால் வரலாறு என்ற அடிப்படையிலே மாவிட்டபுரம் தனித்தன்மையானது. அப்படிப்பட்ட திருக்கோயிலுடைய சீர்திருத்தத்திருப்பணிகள் ஆரம்பித்து இருப்பதாக அறியக் கிடைக்கிறது. பொருள் வலிமை உள்ளவர்கள் பொருள் உதவி புரியுங்கள். மனவலிமை உள்ளவர்கள் போற்றி வழிபடுங்கள். மாவைக்கந்தனுடைய திருவருள் உலகெங்கும் பரவ முருகனை வழிபடுவோமாக!

**"பரிமுக மாது கண்டு பரிந்து நீ அருளும் செய்தாய்
அவளுமே உன்னைப் போற்றி மாவையில் கோயில் செய்தாள்
பூங்குயில் துஞ்சும் சோலை மாமரம் சூழ்ந்த சாலை
தன்னிலே அமர்ந்து நின்றாய் மாவையூர் முருகனாரே "**

**திருச்சிற்றம்பலம்**

## பொன்னம்பலத்தில் இருந்து மின்னம்பலத்திற்கு...

(முதலாம் பக்கம் பார்க்க)

அவ்வாறு ஐயாவே முன்னின்று, தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இந்த திருமுறைகளை தொகுத்து அச்சேற்றினார். அத்துடன் நின்றுவிடாது அவற்றினை அப்படியே இணையத்திலும் பதிவேற்றம் செய்தார். மேலும் திருமுறைகளை 27 மொழிகளில், மொழிபெயர்த்து அவற்றினையும் இணையத்தில் பதிவேற்றியுள்ளார்.

ஐயாவுடன் சேர்ந்து துணைநின்ற மொழி பெயர்ப்பாளர்கள்,இணையதளவடிவமைப்பாளர்கள் மற்றும் ஓதுவார்கள், புலவர்கள் என 42



தருமபுரம் ஆதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

பங்களிப்பாளர்களையும் நாங்கள் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களின் கடுமையான உழைப்பால் நாங்கள் இன்று எங்கிருந்தாலும் திருமுறைகளை படிக்கவும், கேட்கவும் இலகுவாக இருக்கிறது.

நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் **தோடுடைய செவியன்** எனத் தொடங்கும் தேவாரம், **முத்துநல் தாமம்** எனத் தொடங்கும் திருவாசகம் இரண்டுக்கும் கலைமாமணி பிரியா முரளியின் மாணவிகள் மூவர் சினேகா மகேசன், ஐசுவரியா இராசகுமாரன் மற்றும்

| | | | |
|---|---|---|---|
| 1 | Vijayakumar B. | Asst. Professor of Tamil | Translator (Assamese) |
| 2 | Ramachandran T. N. | Scholar of repute | Translator (English) |
| 3 | Sankaranarayanan S. A. | Formerly Professor | Translator (English) |
| 4 | Subramanian V. | Linguist (USA) | Translator (English) |
| 5 | Thaniga Subramaniam | Author, Treasurer | Translator (German) |
| 6 | Sundaram N. | Formerly Professor | Translator (Hindi) |
| 7 | Malarvili K. | Professor | Translator (Kannada) |
| 8 | Jayalalitha | Professor | Translator (Kannada) |
| 9 | Supramani Shoniah | Professor | Translator (Malay) |
| 10 | Malavizhi Sinayah | Professor | Translator (Malay) |
| 11 | Thilagavathi Kanagaretnam | Professor | Translator (Malay) |
| 12 | Pawathy Nalliannan | Professor | Translator (Malay) |
| 13 | Mannar Mannan Maruthai | Professor | Translator (Malay) |
| 14 | Pushpavalli A. Rengasamey | Professor | Translator (Malay) |
| 15 | Ponniamah M. Muniandy | Professor | Translator (Malay) |
| 16 | Selvajothi Ramalingam | Professor | Translator (Malay) |
| 17 | Krishnan Ramasamy | Professor | Translator (Malay) |
| 18 | Thanalachemi Perumal | Professor | Translator (Malay) |
| 19 | Annathurai Kasinadan | Professor | Translator (Malay) |
| 20 | Chandrasekaran Nair K. G. | Asst. Director, Co-op audit dept. | Translator (Malayalam) |
| 21 | Rani Natarajan | Formerly Professor | Translator (Myanmar) |
| 22 | Jayaprakash S. | Professor | Translator (Telugu) |
| 23 | Satyavani J. V. | Professor | Translator (Telugu) |
| 24 | Guna Sekhar G. | Formerly Principal | Translator (Telugu) |
| 25 | Munirathnam J. | Formerly Professor | Translator (Telugu) |
| 26 | Murthy Y. V. S. S. N. | Formerly Professor | Translator (Telugu) |
| 27 | Sashikala Dhivakar | Formerly Vice Principal | Translator (Telugu) |
| 28 | Kamatchi Ramasamy | Lecturer | Translator (Sanskrit) |
| 29 | Panchapakesa Sasthrigal A. | Formerly Professor | Translator (Sanskrit) |
| 30 | Kothandaraman S. | Formerly Head Master | Translator (Sanskrit) |
| 31 | Thiagarajan R. | Formerly Professor | Translator (Sanskrit) |
| 32 | Vadivel R. | Retired Head Master | Translator (Sinhalese) |
| 33 | Murugaiyan S. | Former Professor of Linguistics | Phonetic Transcriptor |
| 34 | Deivasundaram N. | Director of Linguistic Studies | Phonetic Transcriptor |
| 35 | Sargurunathan Paa. | Pann Isai Othuvar | Pann Isai |
| 36 | Thiruvaranga Yayathi | Pann Isai Othuvar | Pann Isai |
| 37 | Potralam Durai Arumugam | Pann Isai coordinator | Pann Isai |
| 38 | Pulavar Arumugam | Tamil scholar of repute | Pann Isai |
| 39 | Aranga Ramalingam | Professor | Pann Isai |
| 40 | Nagarajan Kaladi S. | Software Developer | Web Design |
| 41 | Murali L. | Web Designer | Web Design |
| 42 | Nithya Ganesan | Data Manager, thevaaram.org | Development Co-ordinator |
| 43 | Sasikumar | Development assistant | Office Assistant |
| 44 | Usha Krishnamurthy | Development assistant | Data Entry |
| 45 | Gayathri Devi | Development assistant | Data Entry |
| 46 | Sasirekha Balasubramanian | Executive Manager, Kaanthalakam | Administrative Contributor |
| 47 | Dhivakar V. | Author, Translator | Public Relations |
| 48 | Chithambaram S | Application Developer | Web Design |
| 49 | Karthikeyan N | Application Developer | Web Design |
| 50 | Dinesh Babu G. | Development assistant | Web Design |

சின்மயி தேவராஜன் அருமையாக நடமாடினார்கள். பத்மஸ்ரீ விருதாளர் பேராசிரியர் சுதாராணியின் மாணவி கலைமாமணி பிரியா முரளி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலச் சொற்களுக்கும், தொடர்களுக்கும் இசை வடிவம் கொடுத்து நடன இசை உரை நிகழ்த்தியவர் கலைமாமணி சசிரேகா பாலசுப்பிர மணியன். கடந்த 22 ஆண்டுகளாக சென்னையில் நூல்கள் பதிப்புப் பணியில் மருவன் மறவன்புலவு ஐயாவுடன் சேர்ந்து பயணிப்பவர் கலைமாமணி சசிரேகா பாலசுப்ரமணியன் அவர்கள்.

**திருச்சிற்றம்பலம்**

50 பங்காளரில் 42 பேர் வருகை தந்திருந்தனர். அவர்கள் ஆளுநரிடம் விருது பெற்றனர். ஆளுநர் அறிக்கையில் ஆங்கிலத்தில் பெயர் இடம்பெற்றமை யால், பெயர் எழுத்து மாறாமல் இருக்க நாங்களும் ஆங்கிலத்தில் தந்துளோம். (தமிழ்ப்பெயர்கள் எங்களுக்கு கிடைக்கவில்லை)



## தலைநகரில் 27 அடி நடேசர்...

(முதலாம் பக்கம் பார்க்க)

நிர்மாணப் பணிகளுக்காக சுவாமி மலைக்கு வந்த குடும்பத்தினர் அங்கேயே தங்கி சிற்பக் கலையில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள், 34 தலைமுறைகளாக சிலைகள் வடிக்கும் பணியை பாரம்பரியமாகச் செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ கந்த சிற்பி அவர்களின் தந்தையான தேவசேன சிற்பி அவர்கள் தேசிய விருது பெற்றவர். தேவசேன சிற்பி குடும்பத்தினர் சுவாமி மலையில் பலருக்கு சிற்பக் கலை பயிற்சி அளித்து வருகின்றனர். தற்போது அந்த ஊரில் 600 சிற்பக் கலைஞர்களும் 100 சிற்பக் கூடங்களும் உள்ளன.



இந்த சிற்பக்கூடத்தை சேர்ந்த 32 சிற்பிகள் இணைந்து இந்த நடரா சர் சிலையை முழுமை யாக செதுக்குவதற்கு ஏழு திங்கள்கள் பணி யாற்றியிருந்தனர். இதன் மாதிரி மெழுகு சிலையை வடிப்பதற்கே கிட்டத் தட்ட மூன்று திங்கள்கள் பணியாற்றியிருந்தனர். மாதிரியானது பல நடன வித்துவான்களால் சரி பார்க்கப்பட்டே திட்டமிடப்பட்டது.

இந்த ஆடல்வல்லானின் திருவுருவச் சிலையானது, எண்வகை உலோகங்களால் காவிரி ஆற்றின் படுகை யில் குறிப்பிட்ட ஓரிடத்தில் உள்ள வண்டல் மண்ணால் செய்யப்பட்டுள்ளது. இதன் நிறை 18 டன்கள் என கூறப்படுகின்றது. இச்சிலையை வடிப்பதற்க்காக 21 டன் நிறையான உலோகங்கள் உருக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு இந்தியாவின் பாரம்பரியத்தை பறைசாற்றுவதற்க்காக தில்லைக்கூத்தப் பெருமானின் திருநடனக்கோலத்தை எடுத்தியம்பி நிலைப்படுத்தி யுள்ளமை தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமைப் பட வேண்டிய விடயமாகும். அதிலும் சோழர்கால சிற்பக்கலையை முன்வைத்து செயற்படுத்தியமை, எம்சைவப்பரம்பரியத்தின் தொன்மையையும் மேன்மை யையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

குறிப்பு: அவரின் பெயரில் ஸ்ரீ இருப்பதால் இங்கு ஸ்ரீ பாவிக்கப்படுள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

## பேரொடுக்க மறைமதி (மாலயம்)...

(முதலாம் பக்கம் பார்க்க)

அறவழி நின்று பொருளீட்டி இன்பமாக வாழ்ந்து வீடுபெறுதல் என்ற வழக்கை முறையினை கடைப் பிடித்து வாழ்ந்தால் அவர் வானுறையும் தெய்வத் துக்கு நிகராக வைக்கப்படுவர் என்பது பொருள்.

அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்தவர் களுக்கு அவர்களின் திதியில் அல்லது பொதுத் திதியாகிய புரட்டாசி மறைமதியில் விரதமிருந்து படையலிட்டு மற்றவர்களுக்கும் தானம் மற்றும் உணவளித்து எங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்வோம்.

**மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மாலய அமாவாசை)**

வருடத்தில் தைத் திங்கள் மறைமதிப் பிறைநாள் (தை அமாவாசை) மற்றும் ஆடித் திங்கள் மறைமதிப் பிறைநாள் (ஆடி அமாவாசை) முக்கியமான நாட்களா கும். இத்தினத்தில் விரதமிருந்து , நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து, நீர் இறைத்து, பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். (அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார்கள்).

அத்துடன் ஆண்டு பிறைநாளாக அல்லது ஆண்டுத்திதியாக மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் அல்லது திதியில் தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாதவர்கள் , பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்களுக்கு ஒரு சிறப்பான செய்தி. கவலையை விட்டு கன்னி நல்லோரை புரட்டாசி திங்கள் வருகின்ற மறைமதிப் பிறைநாள் (புரட்டாசி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப் பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்க காலம்), ஆகவே இந்த மறைமதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம்முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள், சிவபூசை, சிவமங்கல நீராட்டு, சிவப்பெருவேள்வி, அடியாருக்கு அமுது , மற்றைய உயிரினங்களுக்கு உணவு, பசுவுக்கு உணவு, காக்கைக்கு உணவு படைத்தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

மாலய மறைமதி என்பது பிதிர்களுக்குரிய சிறப்பு நாளாகும். இந்நாளில் அடியவர்கள் விரதமிருந்து சிவனை வழிபட்டு, மறைந்த உங்கள் பெற்றோர்கள், அவர்கள் வழிவந்தவர்கள் மற்றும் உங்கள் முன்னோர்களையும் வணங்கி, அவர்களுக்கு படையலிட்டு அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் துணை நிற்கட்டும். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர் குறைகளில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

**மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்**

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



## தத்துவங்களின் தோற்றமும் செயற்பாடும்

### சுத்தமாயா தத்துவங்கள் எப்படித் தோன்றுகின்றன?

இறைவனின் சத்தி ஞானம், கிரியை, இச்சை என மூன்றாக நிற்கிறது. இறைவன் தனது சத்தியைச் சுத்த மாயையில் செலுத்தும் செலுத்தும் பொழுது ஞானமும், கிரியையும் தனித்தும், சம அளவிலும், கூடிக் குறைந்தும் இருக்கும். இச்சா சத்தி ஒரே தன்மையாக இருக்கும்.

ஞானசத்தியைச் சுத்தமாயையில் செலுத்தும் பொழுது, அதில் ஒரு அசைவு உண்டாகும். இதிலிருந்து தோன்றுவது நாத தத்துவம். இது சிவ தத்துவம் எனவும் கூறப்படும். கிரியா சத்தியைச் செலுத்தும் பொழுது அதனிடத்து ஒரு சுழற்சி தோன்றும். அது விந்து தத்துவம். இது சத்தி தத்துவம் எனவும் சொல்லப்படும். சுத்தமாயையில் ஞானமும் கிரியையும் சம அளவில் தொழிற்படும் பொழுது தோன்றுவது சதாசிவ தத்துவம். இத்தத்துவம் சாதாக்கியம் எனவும் கூறப்படும். சாதாக்கிய தத்துவத்தில் நின்றே இறைவன் அதன் கீழுள்ள தத்துவங்களை இயக்குகிறான். இறைவனின் கிரியா சத்தி கூடியும் ஞானசத்தி குறைந்தும் செயற்படும்போது ஈசுவரம் என்னும் தத்துவம் தோன்றும். ஞானசத்தி கூடியும் கிரியாசத்தி குறைந்தும் இருக்கும் போது சுத்தவித்தை தோன்றும். இவ்விரண்டு தத்துவங்களும் கீழுள்ள தத்துவங்களை இயக்கும்.

### அசுத்த மாயா தத்துவங்கள் எப்படித் தோன்றுகின்றன?

சுத்தமாயா தத்துவங்கள் சிவனால் தோற்றுவிக்கப்படுகின்றன. அசுத்தமாயா தத்துவங்களை அநந்ததேவரை அதிட்டித்து நின்று சிவன் தோற்றுவிக்கிறான்.

மேலே கூறப்பட்ட சிவ தத்துவம் (நாத தத்துவம்) மாயையை எழுப்பும். இந்த மாயை அசுத்தமாயா காரியமான ஏழு தத்துவங்களில் ஒன்றான மாயை என்பது கவனத்துக்குரியது. சத்தி தத்துவம் காலம், நியதி, கலை ஆகிய மூன்றையும் எழுப்பும். சாதாக்கிய தத்துவம் புருடனை எழுப்பும். ஈசுவரம் அராகத்தை எழுப்பும். சுத்தவித்தை வித்தையை எழுப்பும்.

இவ்வேழு தத்துவங்களில் காலம், நியதி, கலை ஆகியவை மாயையிலிருந்து தோன்றுகின்றன. கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றுகின்றன. புருட தத்துவம் என்பது காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து தத்துவங்களின் கூட்டாக உள்ளது. இது ஒரு தனித்தத்துவமல்ல.

இத்தத்துவங்கள் சிவன் வழி நிற்கும் வித்தியேசுவரர் ஆகிய அனந்தேசுவரரால் காரியப்படுத்தப்படுவதால் வித்தியா தத்துவம் எனப்படுகிறது.

### பிரகிருதி மாயா தத்துவங்கள் எப்படித் தோன்றுகின்றன?

சீகண்டருத்திரரை அதிட்டித்து நின்று இறைவன் பிரகிருதிமாயா தத்துவத்தைத் தோற்றுவிக்கிறார். சீகண்டருத்திரர் ஆன்மவர்க்கத்தில் உயர்பதம் அடைந்தவர். ஆன்மவர்க்கத்தைச் சேர்ந்த இவரால் இயக்கப்படுவதால் பிரகிருதி மாயை ஆன்மதத்துவம் எனவும் கூறப்படுகிறது.வித்தியா தத்துவத்திலுள்ள கலையிலிருந்து பிரகிருதி தோன்றும். இதனை மூலப் பிரகிருதி என்றும் சொல்வர்.

### பிரகிருதி என்பதன் விளக்கம் என்ன?

பிரகிருதி என்பது இயற்கை எனப் பொருள் தரும். பிரகிருதி அல்லது மூலப்பிரகிருதியின் வடிவம் குணம். இது சாத்துவிகம், இராசதம், தாமசம் என மூன்று குணங்களின் வடிவமாக நிற்கும். பிரகிருதி மாயா தத்துவங்கள் முக்குணங்களின் தன்மையைக் கொண்டு இருப்பன. பிரகிருதிக்கு மான் என்றும் ஒரு பெயருண்டு.

### பிரகிருதியிலிருந்து தோன்றும் தத்துவங்கள் பற்றிக்கூறுக?

கலையிலிருந்து மூலப் பிரகிருதி தோன்றுமென அறிந்தோம். இப்பிரகிருதியில் முக்குணங்களும் வெளிப் படாமல் அடங்கி இருக்கும். முக்குணங்களும் வெளிப் பட்டுச் சமமாக நிற்கும் நிலையில் மூலப் பிரகிருதி குண தத்துவம் எனப் பெயர் பெறும். சில நூல்களில் குண தத்துவம் என்பது முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது. பல நூல்களில் இது காட்டப்பட வில்லை. சித்தம் என்பது குணம் மயமாக, குண தத்துவமாக இருக்கிறது. இதனால் குண தத்துவத்துக்குப் பதிலாக சித்தம் ஒரு தத்துவமாகக் கொள்ளப்படுகிறது. குண தத்துவத்தைக் கொள்பவர்கள், சித்தத்தை மனம் என்னும் தத்துவத்தில் அடக்குகிறார்கள்.

சித்தம் என்னும் (குண) தத்துவத்திலிருந்து புத்தி தத்துவமும், புத்தியிலிருந்து அகங்காரம் எனும் தத்துவமும் தோன்றும். அகங்காரம், முக்குணங்களின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப, தைசதம், வைகரி, பூதாதி என மூன்று வகையாக நிற்கும்.

தைசதம் என்றால் ஒளியுடையது என்பது பொருள். சாத்துவீக குணம் அதிகமாக உள்ளது தைசத அகங்காரம். இதிலிருந்து மனம் எனும் தத்துவமும், கண், காது முதலிய ஞானேந்திரியங்களும் தோன்றுகின்றன.

வைகரி என்றால் விகாரப்படுவது என்பது பொருள். இராசத குணம் அதிகம் உடையது வைகரி அகங்காரம். இதிலிருந்து கை, கால் முதலிய கன்மேந்திரியங்கள் தோன்றுகின்றன.

பூதாதி அகங்காரம் தாமத குணம் அதிகம் உடை யது. இதிலிருந்து சுவை, ஒளி முதலிய தன்மாத்திரைகளும், தன்மாத்திரைகளிலிருந்து நிலம், நீர் முதலிய ஐந்து பூதங்களும் தோன்றுகின்றன. தன்மாத்திரைகள் என்பன ஐம்பூதங்களின் நுண்ணிய நிலையைக் குறிப்பதாய், அவற்றின் குணத்தை அடக்குவதாய் உள்ளன.

### இத்தத்துவங்களால் உயிர் பெறும் பொதுவான பயன் என்ன?

சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தும் அவற்றுக்குக் கீழே உள்ள அசுத்தமாயா தத்துவங்களைச் செலுத்துவதால், அவை பிரேரக் காண்டம் எனப்படும். பிரேரித்தல் என்ற சொல் செலுத்துதல் என்ற பொருள் தருகிறது. காண்டம்- பகுதி. இவற்றால் செலுத்தப்படும் அசுத்தமாயா தத்துவங்கள் ஏழும் உயிருக்கு ஆணவச் சேர்க்கையால் உண்டான அறியாமை நீங்கச் செய்து உயிரின் ஆற்றல்களான ஞானம், இச்சை, கிரியைகளை விளங்கச் செய்கின்றன. இதனால் உயிர்வினையை ஈட்டி நுகரும் பலனைப் பெறமுடிகிறது.

இதற்குத் துணை புரிவதால் வித்தியா தத்துவங்கள் போசயித்திரு காண்டம் எனப்படுகின்றன. போசயித்திரு என்பதன் பொருள் நுகர்வோன்.

பிரகிருதி மாயா தத்துவங்களின் மூலம் உயிர் இன்பம், துன்பம், மயக்கம் ஆகியவற்றை அடைகிறது. இவை முக்குணத் தன்மை கொண்டவை. இந்தப் போகங்களில் உயிரை உட்படுத்துவதால் ஆன்ம தத்துவங்கள் போக்கிய காண்டம் (அல்லது போக காண்டம்) எனப்படுகின்றன.

### புருடன் என்ற பெயரால் தத்துவமும் ஆன்மாவும் குறிக்கப்படுவதன் காரணம் என்ன?

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து தத்துவங்களும் சேர்ந்து ஆன்மாவுக்குச் சட்டைபோல அமைகின்றன. இது ஆன்மாவின் கஞ்சுக சரீரம் எனப்படும். இந்த ஐந்து தத்துவங்களின் கூட்டு புருடதத்துவம். இத் தத்துவங்களின் சேர்க்கையால் ஆன்மா செயற்பட ஆயத்தமாக நிற்கும். இந்நிலையில் ஆன்மா புருடன் (புருஷன்) எனப்படும்.

### புருடனாக அமைந்த ஐந்து தத்துவங்களின் செயற்பாட்டைத் தனித்தனியாக விளக்குக.


உயிர்கள் முன் செய்த வினைப்பலனை இன்ன காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்பது காலம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவர் செய்த வினையின் பயனை அவரே அனுபவிப்பதும் அனுபவிக்கும் சூழலும் நியதி தத்துவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆணவத்தினால் மறைக்கப் பட்டு வெளிப்பட முடியாமல் இருக்கும் உயிரின் செயலாற்றல் (கிரியா சத்தி) வெளிப்பட கலை துணைபுரிகிறது. இது போல் உயிரின் அறிவாற்றல் (ஞான சத்தி) வெளிப்படத் துணைபுரிவது வித்தை. உயிரின் இச்சாசக்தி வெளிப்படத் துணை புரிவது அராகம்.” இதனால் உயிரின் கிரியா சக்தியை எழுப்பும் கலை என்ற அகங்கார தத்துவம் செயலை ஊக்குவிப்பது. தத்துவம் அகங்கார தத்துவத்துக்கு உட்கருவியாக உள்ளது. உயிரின் ஞான சத்தியை எழுப்பும் வித்தை என்ற தத்துவம் புத்தி தத்துவத்திற்கு உட்கருவியாக உள்ளது. ஞான சத்தி (அறிவாற்றல்) தொழிற்படும் இடம் புத்தி தத்துவம் எனப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று – பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்





**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

## அப்பரும் சம்பந்தரும் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை

திருநாவுக்கரச நாயனார் திருவாரூரை வணங்கிக் கொண்டு, திருப்புகலூர் நோக்கி வரும் நாளில், அப்பமூர்த்தி திருவாரூரினின்றும் திருப்புகலூரை நோக்கி, எழுந்தருளி வருகின்றார் என்று கேள்வியுற்று, அந்நாளில் திருப்புகலூரில் முருக நாயனார் உடைய திருமடத்திலே தங்கியிருந்த திருஞானசம்பந்தப் பெருமான், அடியார் கூட்டத் தோடும் சென்று, அவரை எதிர்கொண்டார். சம்பந்தர், அப்பர் பெருமானை வணங்கி, **"அப்பரே நீர் வரும் நாளிலே திருவாரூரிலே நடந்த பெருமையைச் சொல்லும்"** என்றார். அப்பமூர்த்தி திருவாதிரைச் சிறப்பை **"முத்து விதான மணிப் பொற்கவரி"** என்னும் திருப்பதிகத்தினாலே சொல்லியருளினார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அதைக் கேட்டு **"நான் திருவாரூருக்குப் போய் சுவாமியை வணங்கி விட்டு இவ்விடத்திற்கு வருவேன்"** என்று சொல்லித் திருவாரூருக்கு எழுந்தருளினார். அப்பமூர்த்தியும் திருச்செங்காட்டாங்குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை, திருமருகல் என்னும் தலங்களுக்கும் போய் வழிபாடு செய்து கொண்டு திருப்புகலூருக்குத் திரும்பினார். சிலநாட் சென்றபின், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாரூரினின்று நீங்கி, திருப்புகலூருக்கு எழுந்தருளி வந்தார். அப்பமூர்த்தி அவரை எதிர் கொண்டு அழைத்து வந்து, முருகநாயனாருடைய திருமடத்தில் அவரோடும் எழுந்தருளியிருந்தார். அந்நாளிலே சிறுத்தொண்ட நாயனாரும், திருநீல நக்கநாயனாரும் அவர்களிடத்திற்கு வந்து, அவர்களோடு இருந்தார்கள்.

சில நாட்களின் பின்னர், திருத்தலப் பயணமாக அப்பரும் சம்பந்தரும் திருப்புகலூரிலிருந்து புறப்பட்டனர். பல தலங்களை வழிபட்ட இருவரும் திருக்கடவூரில் குங்கிலியக்கலையை நாயனார் இல்லத்தில் ஒருநாள் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு திருவீழிமிழலையை அடைந்தனர். அந்த சமயம் திருவீழிமிழலையில் மழையின்மையாலும், காவேரிப்பெருக்கின்மையாலும் பெரும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். இதைக்கண்டு அப்பரும் சம்பந்தரும் வருந்தி பரமசிவனிடம் வேண்டினார்கள்.

அதன் நிமித்தம் பரமசிவன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கும் திருநாவுக்கரசுநாயனாருக்கும் தோன்றி, **"காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுக்குக் கொடுக்கும் பொருட்டு, நாம் உங்களுக்குப் படிக்காசு தருகின்றோம்"** என்று திருவாய்மலர்ந்து, திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும், தினந்தோறும் படிக்காசு வைத்தருளினார். அவ்வடியார்களிருவரும் தாங்கள் பெற்ற படிக்காசுகளை அனுப்பிப் பண்டங்கள் வாங்குவித்து, அமுது சமைப்பித்து, **"முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அடியவர் எல்லாரும் வந்து உணவு உண்ணுக"** என நாளின் இருபோதும் பறைசாற்றி உணவு இட்டனர்.

திருஞானசம்பந்தர் உமையம்மையாரின் திருமுலைப் பாலை, உலகம் உய்யும் பொருட்டு உண்ட திருமாமகனார் ஆதலால், ஈசரான மிழலை நாதரிடத்துக் குற்றம் உடைய காசினைத் திருஞானசம்பந்தர் பெற்றார். கைத் திருத்தொண்டு செய்கின்ற அடிமையானவர் ஆதலால் அக்குற்றம் இல்லாத காசினைத் திருநாவுக்கரசர் பெற்றார். இறைவர் வைத்த படிக்காசின் பேரருளால், முடிவு இல்லாத பொருளைப் பெற்றவர்களான இரு பெருமக்களின் மடங்களிலும், தொண்டர்கள் மகிழ்ந்து நாளும் சோறு உண்ண உண்ணக் குறைவின்றி ஓங்கி வளரும் பெருமையை உலகம் போற்ற இன்பம் அடைந்திருந்தது.

## திருமறைக்காட்டில் கதவு மூடவும் திறக்கவும் பாடியருளியமை

அந்நாளில் அரிதில் கிடைக்கப் பெற்ற திருவீழிமிழலையின் பெருமணியாம் இறைவரை வணங்கிப் பிரிய இயலாத நிலையில் விடை பெற்றுக்கொண்டு, திருவாஞ்சியத்தை கடந்து, அளவில்லாத சிறப்புடையராய அப்பெருமக்கள் இருவரும், செல்வம் மிக்க திருமறைக்காட்டைச் சென்றடைந்தனர். பெருமக்கள் இருவரும் திருமறைக்காடர் திருக்கோயிலை அடைந்து, வலம் வந்து நுழைவாயிலை அடைந்த போது, பழைய மறைகள் திருக்காப்பிட்ட திருவாயில் பூட்டிய நிலையை நீக்கவல்ல அன்பர்கள் வாராததால், அதன் அருகேயுள்ள ஒரு வாயிலின் வழியே சென்று, உயிர்க்குற்ற துயர் அனைத்தையும் நீக்க வல்ல சிவபெருமானை, அன்பர்களாய்த் தொழுவார்கள் மேற்கொள்ளும் முறைமையைப் பார்த்து, ஞானசம்பந்தரும், நாவரசரும் அச் செய்தியை அங்குள்ளவர்கள் கூறக் கேட்டு அறிந்தனர்.

அதுபொழுது ஆளுடைய பிள்ளையார், **"அப்பரே உயர்ந்த மறைகள் வழிபட்ட தேவ தேவரான இறைவனைக் காணக் கோயிலுள் புகுந்து, தடையின்றி நாம் இருவரும் நேர் வாயிலில் வணங்குதற்காகத், திருமுன்புள்ள கதவு திருக்காப்பு நீங்குமாறு பாடியருளுக"** எனச் சொல்ல, புகழ்மிக்க நாவரசரும், அதனை ஏற்று, **"பண்ணின் நேர் மொழியாள்"** (தி.5 ப.10) எனத் தொடங்கிப் பாடவும் இறைவன் திருக்கதவைத் திருக்காப்பு நீக்கித் திறப்பதற்குத் தாழ்க்கத், திருக்கடைக் காப்பில், **"எண்ணீர்! இரக்கம் ஒன்று இல்லீர்"** என்று நாவரசர் பாடி வணங்கிய அளவில், திருமறைக்காட்டில் விளங்கும் மெய்ப்பொருளாகிய இறைவரின் திருவருளினால், விளங்கும் மணிக்கதவமானது, பத்திமையுடைய அன்பர்களின் முன் திருக்காப்பு நீங்கவே, கலை மொழியின் வேந்தரான ஞான முனிவர் சம்பந்தருடன் தொழுது, விழுந்து பணிந்தார். மூவுலகும் இதனை போற்றி மகிழ்ந்தது.

ஞானசம்பந்தரும், நாவரசரும் அடியார் திருக்கூட்டத்தோடு பெருமானை தொழுது வணங்கிய பின்பு, கோயிலின் வாயில் புறத்து வந்தணைந்த நாவரசர், இறைவரின் திருவருளால் இக்கதவு திறக்கவும் அடைக்கவுமாய நெறியில் இயங்கத் திருவுளம் கொண்டவராய், சீகாழியில் தோன்றிய ஞானசம்பந்தரைப் பார்த்து, அருளால் நிறைந்த இக்கதவம் அடைக்கும் வகையை நீரும் அருளுக எனக் கூற, ஞானசம்பந்தரும் பதிகம் பாடிய அவ்வளவில், இறைவரின் அருளால், மிகுந்த விரைவுடன் பதிகம் தொடங்கிய முதல் திருப்பாட்டிலேயே, திருக்கதவு திருக்காப்புக் கொண்டது.

இறைவரின் திருமுன்பு உள்ள அவ்வாயிற் கதவம் திறக்கவும், மூடவுமான நிலையில் அன்று முதல் என்றும் நிகழலாயிற்று. அவ்விடத்து நிகழ்ந்த அச்செயலைப் பார்த்த தொண்டர்கள் எல்லோரும் அதிசயம் அடைந்து, உடல் முழுவதும் மயிர்க் கூச்செறியக், கண்களினின்றும் அன்பு நீர் பொழிந்து வழிய, எங்கும், எந்த ஒன்றாலும் ஒப்பில்லாத அவ்விரு பெருமக்களின் திருவடிகளையும் வணங்கினர்.

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (230 - 274)**

சிவத்திரு. தென்னாடு நிலவன்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு ஒப்பிலாநாயகி உடனுறை நெடுங்களநாதர் [நித்தியசுந்தரர்] திருக்கோயில் – திருநெடுங்களம்

## [தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 71 ஆவது திருக்கோயில் திருநெடுங்களம்]



**"குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே."**

ஆணும் பெண்ணும் அனைத்திலும் சமம் என்பதை உணர்த்தும், சிவபெருமானின் மாதொருபாகனார் திருக்கோலத்தை கருவறையில் கொண்டு அருள் புரியும் அற்புத திருத்தலமே, அருள்மிகு அருள்மிகு ஒப்பிலாநாயகி உடனுறை நெடுங்களநாதர் (நித்தியசுந்தரர்) உறையும் திருநெடுங்களம். இத்தலம் எமது காரியங்களில் ஏற்படக்கூடிய தடைகளை தகர்க்கும் சிறப்புத்தலமும் ஆகும். வங்கிய சோழன் பூசித்துப் பேறுபெற்ற தலமும் ஆகும்.

**அமைவிடம்:** திருச்சி மாவட்டம், தமிழ்நாடு

திருச்சி - தஞ்சை சாலையில் வந்து துவாக்குடி என்னுமிடத்தில் பிரியும் சாலையில் 4 கி. மீ. சென்று நெடுங்களத்தையடையலாம். திருச்சி மெயின்கார்டு கேட்டிலிருந்து நகரப் பேருந்து செல்கின்றன. திருச்சி - மாங்காவனம், நகரப் பேருந்து இத்தலம் வழியாகச் செல்கிறது.

**இறைவர் திருப்பெயர்:** நெடுங்களநாதர், நித்தியசுந்தரர் திருநெடுங்களமுடைய நாயனார், நெடுங்களமுடையார், உலகாண்டேசுவரமுடையார், களந்தை நாயகர், திருநெடுங்களமுடைய தம்பிரானார், நிழலார் சோலை வளமுடையநாயனார், திருநெடுங்களத்து ஆள்வார்.

**இறைவியார் திருப்பெயர்:** மங்களநாயகி, ஒப்பிலா நாயகி.

**கோயில் மரம்:** வில்வம் மரம்

**தீர்த்தம்:** அகத்திய தீர்த்தம், சுந்தர தீர்த்தம்.

**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேக்கிழார், அகத்தியர்.

**பாமாலை:** திருஞானசம்பந்தமூர்த்தி, ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்**
**பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்**
**குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த**
**நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.**

*(1-52)*

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய திருப்பதிகம்

**தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது**
**பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி**
**எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே**
**நெடுங்களத்தான் பாதம் நினை.** *(11-5-8)*

### திருத்தலச் சிறப்பு

இறைவன் மாதொருபாகனாக திருக்கோலம் கொண்டுள்ள இக்கோயில் சோழர்கள் பலராலும் திருப்பணிகள் செய்யப்பட்டதாகும். அதற்கான கல்வெட்டுகள் பலவும் இங்கு காணப்படுகின்றன. இத்தலத்திலுள்ள வெண்கலக்குதிரை விந்தையான அமைப்புடையது. பெருமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள சோழர்காலக் கல்உரல் சிறந்த வேலைப்பாடுடன் அமைந்துள்ளது. நெடுங்களப் பதிகத்தில் வரும் பாடற் கருத்துக்கள் அனைத்தும் இராச கோபுரத்தில் முன்னும் பின்னும் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. கருவறையின் மேல் இரு விமானங்கள் அமைந்து புதுமையாகக் காட்சியளிக்கின்றன.

இத்தலத்தில் உள்ள ஆலமர்கடவுளின் (தட்சிணாமூர்த்தி) அமைப்பு அற்புதமானது - யோக தட்சிணாமூர்த்தி, சித்தாசனத்தில் அமர்ந்து, மேற்கரங்களில் மான் மழுவும், கீழ்க் கரங்களில் சின் முத்திரையும் திருநீற்றுப் பெட்டகமும் ஏந்தி, இடக்காலைச் சுற்றியவாறு யோக பட்டம் விளங்கக் காட்சி தருகிறார்.

இக்கோயிலின் ஒன்பான்கோள்கள் (நவக்கிர கங்கள்) சந்நிதியில் (பதினொான்று திருவுருவங் கள்) சூரியனாரின் திருவுரு தமது இரு மனைவிய ரோடு மேற்கு திசை நோக்கியும் ஏனைய எட்டு கோள்களின் திருவுருவங்கள் சூரியனாரை நோக்கியும் காட்சி தருவதாக அமைந்துள்ளது. ஆண்டுதோறும் சிவபெருமான் மீது ஆடி



திங்களில் சூரியக்கதிர்கள் படுமாறு அமைக்கப் பட்ட சிறப்பு கொண்டது.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டில் இத்தலம் **"பாண்டிகுலாசினி வளநாட்டு வடவீர நாட்டு திருநெடுங்களம்"** என்றும், இறைவன் பெயர் **"நெடுங்களத்து மகாதேவர்"** என்றும் குறிக்கப்பட் டுள்ளது. இத்தலத்தில் 30க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. மக்கள் கொச்சையாக பேசும்போது மட்டும் இத்தலத்தை **'திருநட் டாங்குளம்'** என்கின்றனர். இத்திருக்கோயிலில் உள்ள நெடுங்களநாதரை வணங்கினால், விடு பட்ட தடைகள் நீங்கும் என்பது தொன் நம்பிக்கை.

### திருத்தல வரலாறு

இத்திருத்தலத்திற்கு ஒளிமதிச்சோலை என்ற புராணப்பெயரும் உண்டு. தவஞ்செய்த அம்மையை இறைவன் கள்வன் உருவில் தோன்றி கந்தர்வ மணம் செய்ய முற்பட, அச்சமுற்று அம்பிகை ஓடியொளிந்த இடம் என்பதால் **"ஒளிமதிச்சோலை"** என்று வழங்குகிறது.

### திருக்கோயில் அமைப்பு

இராசகோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. இறைவியார் திருக்கோயில் வெளிப்புறம் அமைந்துள்ளது. எழுந்தருளல் திருமேனிகளாக அம்மையப்பமுருகன் (சோமாசுகந்தர்), விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் முதலியன சிறப்பாகவுள்ளன.

அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. நின்ற திருக்கோலம். மூலவர் - நிறைவான மூர்த்தி. நாடொறும் நான்கு கால பூசைகள். திங்கள் விழாக்களுடன் ஒன்பானிரவு (நவராத்திரி),



கழுவாய் வழிபாடு (பிரதோசம்), தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலியவை சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தில் பெருவிழா. அண்மையிலுள்ள தலம் திரு வெறும்பியூர். 30-6-1999ல் திருக்குடநீராட்டு நடைபெற்றது. இத்தலத்தில் 30க்கு மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன.

**கல்வெட்டுக்கள்** - இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 34 உள்ளன. அவை சுந்தர பாண்டியன் காலத்தன மூன்றும், கரிகாலன் காலத்தது ஒன்றும், ஸ்ரீவல்லபதேவனது ஒன்றும், இராஜகேசரிவர்மன் காலத்தன ஒன்பதும், 3 ஆம் இராஜராஜன் கல்வெட்டு இரண்டும், ஹொய்ஸள வீரராமநாத தேவரது ஒன்றும், திரிபுவன வீரதேவனுடையன இரண்டும், பரகேசரி வர்மனென்று மட்டும் குறிப்பன மூன்றும், விஜயநகர அரசர்களுடை யன ஐந்தும், நாயக்க மன்னரது ஒன்றும் ஏனைய அறியப் படாதனவுமாக அமைந்தன.

இத்தலம் சுந்தரபாண்டியன் காலத்து பாண் டிய குலபதி வடகரைநாட்டுத் திருநெடுங்களம் என்றும்(627 இன் 1909.), இராஜராஜ தேவன்III காலத்து பாண்டியகுலாசனி வளநாட்டு வட காவிரிநாட்டுப் பிரமதேயம் தியாகவல்லி சதுர்வேதி மங்கலமான திருநெடுங்களம் என்றும் குறிக்கப்பெறுகிறது. இறைவன் திருநெடுங்கள முடைய நாயனார்(667 இன் 1909), நெடுங்கள முடையார், உலகாண்டேசுவரமுடையார்(679 இன் 1909), களந்தை நாயகர்(692 இன் 1909), திருநெடுங்களமுடைய தம்பிரானார்(693 இன் 1909), நிழலார் சோலை வளமுடையநாயனார் (793 இன் 1909), திருநெடுங்களத்து ஆள்வார் (682 இன் 1909) என்றெல்லாம் வழங்கப் பெறுகிறார்.

இவ்வரசர்கள் அனைவரும் கோயிலுக்குப் பொன்னும், நெல்லும், நிலமும் அளித்த செய்தி அறிவிக்கப்பெறுகின்றன. அரசர்களேயன்றி, அரசருடைய தண்டல் நாயகர்களும், அரச காரியம் பார்ப்பவர்களும், மனைவியார்களும் அறம் செய்துள்ளனர். இராஜ கேசரிவர்மன் மூன்றாமாண்டில் உறையூர் உடையான் ஒருவ னால் லோககசுந்தரத் திருப்படிமம் நிலைப்படுத் தப்பட்டது. (682 இன் 1909), பிள்ளையார் கோயிலுக்கு விளக்கீடு செய்வித்தான் இராஜ கேசரி வர்மன் ஐ (கி.பி. 985-1013). பித்தளையால் செய்யப்பட்டு பொன்முலாம் பூசப்பெற்ற மத்தளி ஒன்றைக் கம்பன் மணியனான விக்கிரம சிங்கன் மூவேந்த வேளாளன் என்பான் ஸ்ரீபலி உபயத்திற்காகச் செய்து கொடுத்தான்(691 இன் 1909). இக்கோயிலில் முழுக்குடி அரசன் வல்லப தேவன் அரங்கமண்டபம் கட்டிக்கொடுத் தான் (692 இன் 1909).

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கண்டி இராசதானி வரலாற்றுடன் தொடர்புடைய திருப்பழுகாமம் சிவன் கோயில்



மட்டக்களப்புத் தேசத்தில் சிறிதும் பெரிதுமான பல ஊர்களில் படுவான் கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய கிராமம் திருப்பழுகாமம் ஆகும். தொன்மை வரலாறு கொண்ட இக்கிராமம் இயற்கை வளத்துடன், தமிழுணர்வும் சைவ உணர்வும் கொண்ட மக்களையும், கலை பாரம்பரியச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இக்கிராமத்தில் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களுடன் கௌரி அம்பிகை உடனுறை கேதீச்சரர் எனும் திருநாமத்துடன் சிவன் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக் கோயில் மட்டக்களப்பு நகரிலிருந்து தென் மேற்கே சுமார் 40 மைல் தூரத்தில் அமையப் பெற்றுள்ளது.

### திருத்தல ஊரின் வரலாறு

**“பழுகாமம்”** என்பதற்கு பல்வேறுபட்ட விளக்கங்கள் இக்கிராமத்தவர்களால் கூறப்பட்டு வருகின்றது. பழுகாமம் ‘பாழுகமம்’ என்ற சொல்லில் இருந்து தோன்றியிருக்க வேண்டும். ஏனென்றால் பாழ்போன கிராமத்தை சிங்களத்தில் ‘பாழகம’ என்பார்கள். இதிலிருந்து ‘பழுகாமம்’ மருவி வந்திருக்கலாம். இன்னொரு காரணம் என்ன வென்றால், விந்தனைக் காட்டில் வாழ்ந்த ஆதிக் குடிகளுள் ஒருவனான ‘பழவன்’ என்பவன். கமத்தொழில் புரிந்து வாழ்ந்தமையால் ‘பழுகாமம்’ ஆயிற்று என்றும் கூறுகின்றனர். அதற்குத் தகுந்தால் போல் பழுகாமம் உள்ளிட்ட படுவான்கரைப் பிரதேசம் ஆதிக்குடிகளின் வாழ்விடத்தளமாக விளங்கியிருந்தது என்பதை வெல்லாவெளி பிராமிச் சாசனங்கள் உறுதிப் படுத்துகின்றன.

கலிங்க மாமன்னனான மாகன் மட்டக்களப்பு தேசத்திற்குப் புரிந்த திருப்பணிகள் பற்றி **“மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்”** எனும் நூல் விபரிக்கின்றது. அச் சரித்திர நூலில்

**“தினசிங்கள் சரித்திரம்”, “சுகதிரன் சரித்திரம்”, “குடிப்பிரிவுகள்”, “குளிக்கல்வெட்டு”** என்ற





பிரிவுகளில் மாகன் பற்றிய பல கதைகளும் குறிப்புக்களும் காணப்படுகின்றன. அதில் இம்மன்னன் தேசத்துக் கோயில் திருப்பணிகளோடு, பழுகாமத்து அரச தொடர்போடும் ஈடுபாட்டுடன் விளங்கினான் என்பதை கீழ்வரும் குறிப்புக்கள் உணர்த்திக் காட்டுகின்றது.

**“பட்டிருப்புக்கு அருகாமையிலுள்ள போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோயிலை இவனே புதுப்பிக்கின்றான். இக்கோயிலுக்கும் கொக்கட்டிச் சோலைக் கோயிலுக்கும் நெல்வயல்கள் பலவற்றை வழங்கிய இம் மன்னனது பிரதான அரசிருக்கை பழுகாமம் என்னும் ஊராகும். மத்திய மலை நாட்டிலிருந்து பழுகாமத்துக்கு வந்த நீண்ட வழியான ‘கண்டி அதர்’ இவன் காலத்திலே பெரும் புழக்கம் உறலாயிற்று.”**

இதற்குத் தகுந்தால் போல் பழுகாமம் ஆதியில் கண்டியரசர்களின் கோடைக்கால வருகைத் தலமாக இருந்தது. அதனால் **“சிங்காரக்கண்டி” “அமைச்சர் பிட்டி”** என்னும் பெயர்கள் பழுகாமத்திற்குச் சூட்டப்பட்டு தற்போது பலராலும் பேசப்படும் விடயமாகவும் உள்ளது.

போர்த்துக்கேயரான கேறொஸ் எழுதியுள்ள நூலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளில் பழுகாமத்தில் இருந்த வன்னியர் ஆட்சி பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக பழுகாமத்தை ஆட்சி செய்த வன்னிமைகள், கண்டி இராச்சியத்தோடு மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள் என்ற விபரம் எழுதப்பட்டுள்ளது மத்திய காலத்திலும் பழுகாமம் சிறப்புற்று விளங்கியமைக்கு பல தொல்பொருட் சின்னங்கள் திரௌபதை அம்மன் கோயிலிலும் அதனை அண்டிய குளக்கரைச் சூழலிலும் காணப்படுகின்றது. திரௌபதை அம்மன் கோயிலில் நடப்பட்டுள்ள கற்தூண் சாசனம் இதற்குத் தகுந்த சான்றாகும். அக் கற்தூணில் இரசாயன வர்ணக் கலவை மெழுகப் பட்டிருப்பதனால் அச் சாசனம் இதுவரை வாசிக்கப்படாது இருக்கின்றது.

### திருத்தல வரலாறு

அக்கரைப்பற்றை பிறப்பிடமாகவும், பழுகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மொட்டைக் குருக்கள் என அழைக்கப்படும் சிவாச்சாரி கு, கணபதிப்பிள்ளை அவர்களால் கால்கோள் இடப்பட்ட சிவன் கோயிலாக விளங்குகின்றது. இவர் பூசகர் மட்டுமன்றி இவ்வூரின் சிறந்த மருத்துவராகவும், பேய், பிசாசுகளை விரட்டும் வித்தைகளையும் சூனியங்களை விரட்டும் மாந்திரீகத்திலும் சிறந்து விளங்கி 1963 ஆம் ஆண்டு சிவபதம் அடைத்தார். அவரின் மறைவினைத் தொடர்ந்து, பூசகரின் துணைவி வள்ளியம்மை, பூககரின் சீடர்கள், ஊர் பெரியோர்கள் ஒன்றுதிரண்டு வழிபாடு செய்வதற்கென்று இந்தியாவிலிருந்து வெண்கலத்தால் வார்க்கப்பட்ட ஒரு நடராசர் வடிவத்துடன் ஒர் வழிபாட்டிடம் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1975 ஆம் ஆண்டு ஓர் ஓலைக் குடிசையில் சிவனுக்கு வழிபாடு தொடங்கப்பட்டாலும், அவ்விடத்தில் வள்ளியம்மையால் பொதுமக்களுக்கு இலவசமாக



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

வைத்திய உதவிகளையும் புரிந்து வரும் நாளில், கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சர பெருமானின் திருவருளால் பண்டாரியாவெளியைச் சேர்ந்த திரு. கு. தெய்வ நாயகம் என்பவருக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்து, தீராத பிறவிப் பிணியால் அவதியுற்ற சந்தர்ப்பத்தில் தான்தோன்றிப் பெருமான் வள்ளியம்மையை நாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இதன்படி தெய்வநாயகம் எனும் பத்தரும் வள்ளியம்மையை நாடி, இறைவன் திருவருள் காட்டிய நிலையையும் கூறி, தன்பிள்ளைக்கு பிணி நீக்குமாறு பணிந்தார். வள்ளியம்மையும் வைத்தியம் புரிந்து பிணி அகற்றினார். இதனால் தெய்வ நாயகம் அவர்கள் கிணறு தோண்டி ஊர் மக்களுக்கு தாக சாந்தி அளித்ததோடு, அவரின் பங்களிப்பில் 1985 ஆம் ஆண்டு செங்கற்களைக் கொண்டு சிவனுக்கு ஒரு சிறிய திருக்கோயில் அமைக்கப்பட்டு, 1987 ஆம் ஆண்டு முதலாவது திருக்குடநீராட்டு திருவிழாவும் நடைபெற்றது.

அதன் பின்பு பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வரும் காலத்தில் வள்ளியம்மையின் ஆலோசனையின் நிமித்தம் 1990 ஆம் ஆண்டு புதிய நிர்வாகத் தெரிவுடன் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. புதிய நிர்வாக முயற்சிகளினால், 1999 ஆம் ஆண்டு புதிய கோயில்





திருப்பணிகள் ஆரம்பமாகியது. 2006 இல் வள்ளியம்மை இறைபதம் அடைந்தார்.

அதனைத் தொடர்ந்து திருக்கோயில் பாலாலயம் செய்யப்பட்டு, இந்திய சிற்பிகளின் பங்களிப்பில் உருவான மூலமூர்த்திகள் வரவழைக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு அடுத்த திருக்குடநீராட்டு சிறப்பாக இடம்பெற்றது. அன்றிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ஐந்து நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்று, ஆறாம் நாள் பங்குனி உத்தரத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வந்துள்ளது. தற்போது அடுத்த திருக்குடநீராட்டுக்காக திருக்கோயில் பெரிதாக்கப்பட்டு பரிவார மூர்த்திகளுக்கு கருவறையோடு சேர்ந்த மண்டபங்கள், கொடிமரத்திற்கு முன்னால் அமைந்த மண்டபத்தின் மேல் சிவனுக்கு பெரிய சிற்பமும், வாயிலில் தோரண வாயிலும் கட்டப்பட்டு வருகின்றது.

திருப்பழுகாமத்தின் சைவப் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் கோயில்களுள், சிவன் கோயிலும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The Importance of Giving

Saivam provides a foundation of ethics and values that all individuals must apply through the course of their lives to live a meaningful life where they make a positive impact on society. Saivam directly emphasises the importance of leading a life dedicated to selfless service and making a positive difference in the lives of others.

It is essential for individuals to transcend their selfish desires and attempt to focus on the welfare of others, wherever and whenever possible. This selflessness is a pathway to spiritual growth and a means of aligning with the divine. In the context of Saivam, living an ordinary life solely driven by personal ambitions and desires is considered limited and spiritually unfulfilling. Furthermore, the act of giving, or providing for others, can be profoundly morally uplifting for any individual, offering a guiding compass towards a life rich in purpose and empathy, thereby granting them a more optimistic outlook on life.

One of the most captivating aspects of Saivam is the simplicity and accessibility of its teachings. You don't need a vast fortune to make a difference in someone's life. Small acts are enough to positively impact other people. Thirumular's Thirumanthiram, in its poetic brilliance, underscores this truth with elegance in song 252:

யாவர்க்கு மாம்இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே

Easy to all to offer in worship a green leaf to the Lord,
Easy to all to give a mouthful to the cow,
Easy to all to give a handful, sitting down to eat,
Easy to all, good, kind words on others to bestow.

This song is highlighting the importance of giving and how it can be very easy to do. Its as easy as providing food to all souls whether animal or human which can benefit their lives. Even when individuals may find themselves unable to provide for others, Thirumular reminds us of a profound truth: that every person possesses the remarkable ability to enhance the lives of others through kind and captivating words. Through these acts of giving, no matter how small, people possess the remarkable ability to infuse hope, nourishment, and happiness into the world.

As shown giving and sharing does not just pertain to donating large amounts of money, it can be done through feeding others or simply by sharing kind words to motivate others. The essence of charity lies in the simplicity of our daily actions, in the everyday opportunities to make a difference. Thirumular's poetry and amongst other Saivam texts act as invitation to each and every one of us, irrespective of our circumstances, to embrace our capacity to bring light to someone else's life. It's a reminder that one's life should be lived with a purpose, not just pertaining to personal ambitions, but also in helping the ambitions of others.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

Although an act of help done timely, might be small in nature, it is truly larger than the world itself. - Thiruvalluvaar


# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar once went to the Thirukolakka Temple in Mayiladuthurai with his father (Sivapathaviruthayar) and disciples. Thirukolakka temple is famous for treating people with speech disorders, there is a story of a mother who prayed that her mute son would be able to speak, her son was soon given the power to speak for the first time in his life by Sivan.Thirukolakka temple



was built in bricks during the Chola period and later changed to black stone, it has a length of 230 feet (70m) and a width of 155 feet (47m), it was here where Sampanthar praised Sivan with the hymn "Madayil Valai Paya" it goes as follows.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சும் கீள்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ

Madayil  vaalai paaya matharaar
Kudaiyum poikai kolakka ulaan
Sadaiyum piraiyum Saampat Poochum keel
Udaiyum konda uruva menkolo

In English this translates to, The valai fish jump in the rivers of Thirukolakka where ladies rejoice divingand bathing in the tanks. What is the reason for the Lord of Thirukolakka (Sivan) to assume a form of matted locks, smeared thiruneeru and some torn clothing?

While singing this hymn Sampanthar  was clapping his hands, after a while his palms started to ache from the clapping, so Sivan compassionately granted a pair of golden cymbals engraved with the words Om Namasivaya to Sampanthar . Sambander placed the cymbals on his head to show devotion and gratitude and then continued singing his hymn and clapping with the use of the golden cymbals.

To be continued...

# Thavaththiru Sivagnana Swamikal

Thavaththiru Sivagnana Swamikal

Every religion is surviving with their literature & philosophies. Authors are born in intervals and literatures are also made. Saivam as a religion is also getting authors at frequent intervals and lots of literatures are made time to time. After the period of Thirumuraikal and Sasthirankal, we have got so many authors and their contributions are remarkable. Arunakirinathar, Kumarakuruparar, Sivagnana Swamikal, Pampan Swamikal, Thayumanavar and the list goes on. It is our duty to worship all these authors and guide the younger generation also to study their works.

In this article, let us go through the life of Sivagnana Swamikal who lived in the 18th century. Swamikal was born in a small village called Vickramasingapuram in Thirunelveli district of Tamil Nadu in the year 1753. [ There is no proof for the year of birth but it can be considered as around 1753]. His parents are Aananthakoothar and Myilammaiar. He was named as Mukkalalingar by his parents. It is believed that Swamikal's forefathers [7 Generations] were blessed by Akasthiar. Swamikal's uncle Namasivayakavirayar sang many songs on Goddess Ulakammman of Papanasam temple. It is told that Swamikal was from the 7th generation.

Swamikal while at his primary school days met a few Thambiran Swamikals in Vickramasingapuram came from Thiruvav duthurai Aadheenam. It is Lord Siva's grace that Swamikal got attracted by the Thambiran Swamikals and invited them for lunch to his home. His mother was very happy in serving lunch to Thambiram Swamikals. While they wanted to leave Mukkalalingar also wanted to go with them and with his parent's permission, he went along with the Thambiran Swamikals. They went to Suchindram near Kanyakumari where a Thiruvaduthurai Mutt is there. Mukkalalingar was taken to Seer Valar Seer Velappa Desika Swamikal, then the junior pontiff of the Aadheenam. He was available at Suchindram by that time. Mukkalalingar worshipped him and Velappa Desika Swamikal by seeing his face and maturity offered Theekkai and Saniyasam to him. Swamikal gave the Theekkai name as Sivagnana Thambiran.

While Junior Pontiff along with other Thambiran Swamikals planned to leave Suchindram, they took Sivagnana thambiran also with them to Thiruvavaduthurai. On the way, all took time to go to Agneeswarar temple at Sepparai near Thirunelveli. Junior Pontiff Swamikal instructed Sivagnana Thambiran to sing songs on Akilandeswarai, the Goddess at the temple. Sivagnana Thambiran sang ‘




Akilandeswari Pathikam' which has 10 songs praising the Goddess. It is a juice of Saiva Sidhantham and all the 10 songs speak about the core philosophy of Saiva siddhantham. We can understand the Grace of God when we study these songs which were written by Sivagnana Thambiran when he was about 10 years old. This is considered to be his first book. In total Swamikal has given us 28 books.

These 28 books are from all parts of the Language like Grammar, Literature, Translation, Critics, Moral etc...

Following are the list of books.

Grammar

1. Tholkappiya Sutravirutthi.
2. Nannool Virutthi urai.

Literature

1. Kalasai Sengazhuneer Vinayagar Pillaithamizh.
2. Kulathoor Amuthambigai Pillaithamizh.
3. Ilasai Pathitrupathu Andaathi.
4. Kalasai Pathitrupathu Andaathi.
5. Kulathoor Pathitrupathu Andaathi.
6. Thirumullaivayil andaathi.
7. Thiruegambar Andaathi.
8. Somesar Muthumozhi Venba.
9. Akilandeswari Pathigam.
10. Kachi Aananda Ruthresar Pathigam.
11. Thiruthondar Thirunamakkovai.
12.Thiruegambar Aanandakkalippu.
13.Panchakra Desigar Maalai.

Translation

1.Kanchipuranam.
2.Siddhantha Prakaasigai.
3. Siva Thathuva Vivegam.
4.Suloga Panchangam.
5.Tharukka Sangraham Annampatteeyam.

Saiva Philosophy

1. Sivagnana Siddhiyar Pozhippurai.
2. Sivagnana Bodha chitrurai.
3. Sivagnana Mabaa diyam.

Critics

1.Ilakkanavilakka Sooravali.
2.Eduthu ennum sollukkitta vairak kuppayam.
3. Ennai ennum Seyyul Sivasama vaadha urai maru ppu.
4. Kambaramayana muthal seyyul sangothra virutthi.
5. Siddhantha marabu kandana kandanam.



**M. Sivashunmugam**
**Professor**
**Saiva Siththantha Direct Training Centre, Thiruvavaduthurai Aatheenam.**

Many of these books had been published by Thiruvavaduthurai Aadheenam. Recently at the Semmozhi conference, all his works have been published and it is heartening to note that all are available now.

Swamikal spent many years in Kanchi puram from where he did the Sivagnana Mabaadiyam. This is considered to be the first of its kind in Tamil language andbeacuse of this great work, Sivagnana Swaigal was called as 'Thiravida Mabaadiya Karthar'.

Swamikal came back to Thiruvavaduthurai mutt and he breathed last from Mutt in the year 1785. As per records from Mutt, it was 17- 04 -1785. His Samathi Thirukoil is available at Thiruvavaduthurai and well maintained by the Mutt. As per Tamil calendar, his Muththi day is Aayilyam star from Chitrai month. As per Guru Maha Sannidhanam's instructions, Swamikal's Gurupoosai is celebrated at Vickrama singapuram [Where he was born], at Suchidram [Where he got Theekkai], at Kanchipuram [where he lived long] and Thiruvavaduthurai [Where he attained Sivapperu]. Recently Perur at Coimbatore is also added to this list where his Guru, Seer Valar Seer Velappa Desikar Swamikal's samadhi is available. It is beleived that Sivagnana Swamikal came to Perur with his Guru. The Guru Pooja is held every year in the months of April / May.

At Vickramasingapuram, Sivagnana Swamikal Peravai celebrates the Gurupoosai every year at Swami's temple. Some of Sivagnana Swamikal's books were republished by this peravai. Tamil Saiva world owes a lot to Sivagnana Swamikal who has contributed greatly to Tamil and Saiva world. We need to take his books at all levels creating an opportunity for everyone to study his works. Let us worship his feet which will help to attain Grace.

# Padal Pettra Thalam – Thiruppurambiyam





Aran Sivasuthan
Grade 6
Sydney

In the depths of the prehistoric, quaint village of Thirupurambiyam, there lies one of the most famous Siva temples located 7 km north of Kumbakonam in the Thanjavur district. The Aesthetic building was originally created by the Cholas during the 9th century. This temple is lined as 46th Paadal Petra Siva thalam due to its appearance in the Thevaram hymns. The name of this temple is known as the Thirupurampiyam Sadchinatheeswarar. Chola king Aditya built a temple in sweet remembrance of the turn of the tide in his favour and named it Aditeeswaram. The present name of the presiding deity is Saadchinathar, and the consort's name is Kuraivilla Azhaki (Goddess with unsurpassed beauty). However, it was later changed to Thirupurambiyam Saadchinatheeswarar.

The story starts with a merchant named Aradhana Guptan who died under the Vanni tree in this temple because of a snake bite. The woman who accompanied him named Rathnavali cried for help from the lord of the temple. Thirugnanasambandhar, a renowned devotee of lord Siva heard the call of help. Sambhan dar sang a special Theva ram which made the merchant alive again. Thirugnanasambandhar even conducted a wedding, with lord Siva,the temple's madappally(place where the prasadam is prepared), and Vanni tree for the merchant and the woman. The Tree as well as Llord Siva are all witnesses of what happened. The temple's name originates from Satchi which means witness.

However, The merchant's first wife couldn't take nor accept the wedding and as a result lord Siva appeared right in front of her and told her the entire truth. Even now we see these witnesses at madurai temple. This incident is known to be described in the Thiruvila yadapuranam as well as the Silappadhikaram. So Punnaivanadhar is called Satchinadhar here. Sabarini thaliam the offering is the only offering given to the goddess. This prasadam is known for its ability to heal muscle discomfort, gout and other pains.

Parikaram.

People believe problems due to court cases will be resolved if the devotees worship the lord in this temple.

Thennadu Note: By praying Sivan, you can manage your vinai better and that may help to have better life.

# Arulmigu Basin Vinayagar Temple - A Cultural Anchor for Tamils in Australia



The Arulmigu Vinayagar Temple, located in The Basin, Victoria, is not just a place of worship but a cultural treasure for Tamils living far from their homeland. This temple has a rich history and serves as a preservation ground to their ancient culture. The roots of the Arulmigu Vinayagar Temple are firmly planted in the rich soil of Tamil heritage. It was established to cater to the spiritual and cultural needs of the growing Tamil diaspora in Victoria.

While we may not know the names of all the founders but their shared vision and tireless efforts were instrumental in bringing this temple into existence. The temple's creation was a labor of the highest class, with the founders working diligently to raise funds, gather resources, and garner support from the Tamil community and various organisations. Their collective dream was to create a sacred space where Tamils in Australia could reconnect with their cultural heritage and practice their faith. Support for the Tamil Community: The Arulmigu Vinayagar Temple plays a pivotal role in the lives of Tamils in Victoria, offering them a sense of belonging and connection to their roots.

Here are some of the ways in which the temple provides support to the Tamil community. The temple conducts daily rituals and prayers, offering Tamils a serene place to worship and seek blessings from Pillayar, a revered deity in Tamil culture. During significant Tamil festivals and cultural events, the temple becomes a vibrant hub of activity. It hosts traditional music, dance performances, and cultural celebrations that allow Tamils to cherish and promote their heritage. The temple acts as a focal point for the Tamil community. It fosters a sense of togetherness, where Tamils can come together, share their experiences, and forge meaningful connections. Some temples even provide Tamil language classes and cultural education, helping younger generations maintain their linguistic and cultural ties.



Siva. Vidhujan
Sivasuthan
Year 8
Melbourne, Victoria.



In conclusion, the Arulmigu Vinayagar Temple in The Basin, Victoria, is more than just a place of worship; it's a cultural lifeline for Tamils living in Australia. Established by dedicated individuals with a shared vision, this temple stands as a symbol of the Tamil community's determination to preserve their cultural heritage and religious traditions. It offers a spiritual haven where Tamils can find solace, rediscover their roots, and celebrate their unique identity. The history of this temple is a testament to the resilience and unity of the Tamil community, and it continues to be a beacon of support and cultural enrichment for Tamils in Australia.

# Eliminate Sin with Thurumurai: Sutramodu Patruavai

Thiruchchittrampalam

To have better education, kids are recommended to sing this Thevaram daily to reduce the impact of the sin associated with them. One the impact of sin is reduced or eliminated they will have better life including education. (Video Song - https://youtu.be/zH_Tnem__as)

sutramodu patruavai thuyakku ara aruththu
kutramil kunankalodu koodum adiyaarkal
matravarai vaanavartham vaan ulakam ēttrak
katravan iruppathu karuppariya loorē.

vandu anaisei konrai athu vaar sadaikal mēlē
kondu anaisei kōlam athu kōl-aravinōdum
vindu anaisei mummathilum veelthara ōr ampaal
kandavan iruppathu karuppariya loorē.

vēthamodu vēthiyarkal vēlvi muthalaaka
pōthinodu pōthumalar kondu punaikinra
naathan-ena nalirul-mun aadukulai thaalum
kaathavan iruppathu karuppariya loorē.

madampadu malaikku iraivan mankai oru pankan
udampinai vidakkaruthi ninra maraiyōnaith
thodarnthu anavu kaalan uyir kaalaoru kaalaal
kadanthavan iruppathu karuppariya loorē.

oruththi umai-yōdum orupaakam athuvaaya
niruththan avan neethi avan niththan neriaaya
viruththan avan vētham ena ankam avai ōthum
karuththavan iruppathu karuppariya loorē.

vinnavarkal vetpu arasu petramakal meiththēn
panamarum menmoliyinaalai anaivippaan
enni varum kaaman udal vēva erikaalum
kannavan iruppathu karuppariya loorē.

aathi adiyaip-paniya appodu malarch-sēr
sōthi oli nalpukai valarkku vadupukkuth



theethuseya vanthu anaiyum anthakan arankak
kaathinan iruppathu karuppariya loorē.

vaaintha pukal vinnavarum mannavarum ancha
paainthu amar seium tholil ilankai nakar vēnthatku
ēyntha puyam aththanaiyum itruvila mēlnaal
kaainthavan iruppathu karuppariya loorē.

paranthu athu niranthu-varu paai-thiraiya Gangai
karanthu ōr sadai mēl-misai ukanthu avalai vaiththu
niranthara niranthu iruvar nēdi ariyaamal
karanthavan iruppathu karuppariya loorē.

attram maraiyaa amanar aatham ili puththar
sotram ariyaathavarkal sonna solai vidduk
kutram ariyaatha perumaan kokudik kōyil
katru ena iruppathu karuppariya loorē.

nalantharu punalpukali gnana sampanthan
kalanthavar karuppariyan mēya kadavullai
palamtharu thamilk-kilavi paththum ivai kattru
valamtharum avarkku vinaivaadal elithu aamē.

Thiruchchittrampalam


# Does the Lord Almighty exist ? A visit to the Temple festival

A famous temple is situated towards the western side of our village. A perennial river flows near the temple. Coconut groves adorn the river banks. The steps on the river bank make it easier for the people to get into the river to have a dip in it.

During temple festival seasons we used to go to the temple with kith and kin. Before entering the temple for worship, we used to have a cool dip in the river and smear holy ash(Thiruneeru) on our forehead. Every year the annual temple festival used to be celebrated during the months of March-April (Panguni, as per Tamil calendar). It used to begin the day after the new moon and culminate with prayer on the full moon day. Thousands of devotees from far and near used to throng to the temple for worshiping the Lord during that temple's festival.

During those days, a temporary fair used to be held near the temple. It was the greatest attraction for the young and old alike. Crowd pulling carnivals, small shops displaying all kinds of eatables and toys used to lure the people. Toy shops were a great attraction for children like me. Generally we used to play with toys made of reed, blow bubbles through them till they burst and enjoy ourselves to the hilt.

This year also, I went to the annual temple festival accompanied by my parents. I was nostalgic about the old days. Lots of new toys on display caught my attention.I bought a beautiful wooden multi-coloured aero-plane, a photograph of the father of our nation with



his spinning wheel (Raattinam/Carousel), and a picture of Lord Muruga seated on a peacock.

I enquired the shopkeeper about who made these products and where they were made. I learnt that they were made by different people at different places. The toy aero-plane was made at Pondicherry by a skilful carpenter. The photograph of Mahatma Gandhi with his spinning wheel was printed in Pune in North India. The Picture of Lord Muruga was a copy of a painting by a famous artist in a press at Chennai.

These answers triggered my thinking. Each and every item had a beauty of its own. All of them were made by somebody. They were not self-created . Engrossed in that thought I returned home.

Saiva Philosophy Reference: That which exists has no action without an actor; world is a created entity and it has a creator - (Ullatharku Seyvonindri...)' - Sivajnanan Botham 1, Aphorism 2 is explained in this story.

Concept via Stories (Source & Reference – Saiva Siththantham, A way of Life by Kovai Kizhar)

# தென்னாட்டு நிகழ்வுகள்



தெய்வத்தமிழில் இறுதிச் சடங்கு வழிபாடுகள் (10-09-2023)



பிறப்புப் புனிறு நீக்கல் சடங்கு (துடக்கு கழித்தல்) - ஒசுத்திரேலியா (09-09-2023)



ஆவணித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (30-08-2023)



சிட்னியில் கடை திறப்புப் பூசை (குளிர்காலம்)



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் நுழைவு தீக்கை (சமய தீக்கை) வழங்கல் (30-08-2023)



தென்னாட்டில் விநாயகர் சதுர்த்தி சிறப்பு வழிபாடுகள் (18-09-2023)



யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நுழைவு தீக்கை (சமய தீக்கை) வழங்கல் (29-08-2023)



அருட்குருநாதர் ஒளியாகம் ந. ஒளியரசு அவர்களினால் ஆற்றப்பட்ட தெய்வத்தமிழ் திருமணவிழா (27-08-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து ஏழாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 12ம் நாள் நிறைமதி அன்று (29-09-2023 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org